293

Regd. No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

JEGAN MOHINI

ஜகன்மோகினி

மலர் 8 MAY 1931 இதழ் 6

OCT 1931



தனிப் பிரதி அணா 3.

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
M24JN
M31·8·6
210033

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்

எட்டாவது ஆண்டு !   எட்டாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 8-வது ஆண்டு 1930ளு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட **சாமளநாதன்** என்னும் அற்புதமான நாவலின் தொடர்ச்சியும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவரும். இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். "**சாமளநாதன்**" சென்றவாண்டின் ஏழாவது சஞ்சிகையிலிருந்து ஆரம்பமாதலால் புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் அந்த ஆறு சஞ்சிகைகளுக்காக 12 அணு கூடச் சேர்த்து ரூ. 2¼ அனுப்பினல்; அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் **அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணு அதிக செலவுண்டாதுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) சந்தா நேயர்கள் நமக்கு எழுதும் கடிதங்களில் **சந்தா நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணு ஸ்டாம்பு** அனுப்பினல்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும். 15 தேதிக்குமுன் சஞ்சிகை வரவில்லையென்று வரும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து **கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதார்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்**

மானேஜர்.

6-வது அதிகாரம்

புத்துயிரளித்த புனிதவதிகள்

திலோத்தமா, தன் மாமியாரையும் புருஷனை யும் கண்டு நடுங்கி நின்றவள், உடனே ப்ரக்ஞை அற் ருள்; அவ்விடத்திலேயே சாய்ந்துவிட்டாள். இதைக் கண்ட அவள் மாமன், விஷயம் இன்னதென்று தெரியா தாகையினுல் "ஐயோ! திடீரென்று ஏன் விழுந்துவிட்டாள். ஒன் றும் தெரியவில்லையே! என்ற அனுதாபத்துடன் தன் கையை உதறி விட்டு எழுந்து திலோத்தமாவை அப்படியே தூக்கி ஓர் விசுப் பலகை யில் கடத்திப் பின்னர் தண்ணீர் கொணர்ந்து முகத்தில் தெளித்த வாறு தன் தமக்கையை நோக்கி "அக்கா! குழந்தைக்கு திடீரென்று ஏன் இத்தகைய மூர்ச்சை உண்டாய்விட்டது. இவ்விதம் அடிக் கடி வருவது வழக்கமா! நினைவே அற்று இருக்கிறுளே?" என்று வெகு விசனத்தோடு கேட்டான்.

திலோத்தமாவின் தாயாருக்கு சகலமான விஷயங்களும் நன்கு தெரிந்துவிட்டதாகையினுல் அவளுடைய வயிற்றெரிச்சலைக் கூறத் திறமன்று; பற்றி எரிகின்றது. அன்னிலைமையோடு அவள் கண்களில் நீர் பெருகப் பேசத் தொடங்கி "ஐயோ! மகா கொடிய பாவத்தைச் செய்து இந்த ஜென்மம் எடுத்துள்ள இவள் ஏன் உயிர் வாழவேண்டும்? இந்த சுவாலம் இப்படியே நின்றுவிட்டாலும் என் வயிறு குளிர்ந்துவிடும். இந்த மகா உத்தமியாகிய தகல்பாஜியின் மனோரதமும் பூர்த்தியாகும். ஆ! குழந்தைகளைப் பெற்ற குடலுக்

உளவறிந்த கள்ளன் என்று பொருள் களவாடியவனுக்குக் கூறுவார்கள். அதைவிட கூடவே இருந்து கொள்ளி வைக்கும் மோசக்காரப் பாவிகளுக்கு இந்த வாக்கியம் மிகவும் பொருத்தமாக விருக்கும். அத்தகைய சண்டாளர்களின் முகத்தில் விழிப்பினும் பிரம்மஹத்தி தோஷமே சாரும்.

13 OCT 1931

210033

கல்லவா அந்த அருமை விளங்கும். பெறாத கொட்டு மலட்டுப் பிறவிக்குத் தெரியுமா! என் கண்மணி போன்ற திலோத்தமாவின் செய்தி உனக்குத் தெரியாதா! அவளை அநியாயமாய் உயிருடன் பலி கொடுத்துவிட்டேன்; பலிகொடுத்துவிட்டேன். இனி அவளுடைய உயிர் நீங்கினும் ஒருவிதமான கவலையு மில்லை. அடி, துரோகி! ஓர் இளங் குழந்தையின் வாழ்க்கையைப் பாழ் படுத்த வேண்டுமென்று எத்தனை நாட்களாகக் கறம் வைத்திருந்தாயடி! உன்னுடைய நாற்றக் குப்பையை—ஊற்றச் சாக்கடையை— மூடி வைத்து, என் குழந்தைக்கு மாமியார் என்கிற பெரும் வேஷம் போட்டு நடித்து, என் கிளியை பூனை போல வாயில் போட்டுக் கொண்டாயடி! பாவி! சண்டாளி! நீ தான் அந்த தடியனுக்குப் பத்தினியாக விருக்கையில் உங்களிருவருக்கும் நன்றாக உழைக்கும் பொருட்டாக ஊர் ஊராகச் சுற்றி யலைந்து என் குழந்தையைத் தேடிப் போறுக்கிறாயா! உனக்கு இத்தகைய பெண் ஒன்றிருந்தால் அப்போது உனக்கு எவ்விதமான கஷ்டம் உண்டாகும். உன் வயிறு எவ்வளவு எரியும்? பெற்ற வயிறு பற்றி எரியும் தன்மையையும், என் குழந்தையின் அருமையையும் அறிய அநியாயக்காரியாகிய உனக்கு எவ்விதமடி தெரியும். நீ இத்தகைய குரோத எண்ணத்தை மூடி வைத்துக்கொண்டு என் குழந்தையை நயவஞ்சமாக அழைத்துச் சென்று சித்திரவதை செய்வதற்கு உனக் கென்ன தைரியமடி! நீதான் அந்தத் தடியனுக்கு சகலத்திற்கும் உரியவளாக விருக்கிறாய். இனி என் குழந்தையை நீ அழைத்துச் செல்வது அனுவசியம். அவள் இறந்துவிட்டதாக இனிமேல் நீங்கள் தீர்மானமாக எண்ணிவிடலாம். அவள் உயிருடனிருந்து உங்களுடைய இம்சைக்கு ஆளாகித் தவிப்பது இறந்ததற்கும் கேடுதான். என் குழந்தை எனக்கு மிகுதியல்ல. உன்னுடைய பிச்சைக்காரத்

தினந்தோறும் பகாஸுரன் போலத் தின்றுவிட்டுப் பத்து யானை பலத்துடன் உள்ள குண்டோதரர்களுக்கு புத்திக்குச் சரியான வேலை இருப்பின் அந்த திமிர் குறையும்; நல்வழி ஏற்படும். புத்தி என்பதே அற்றுவிட்ட மூதேவிகள் தமது திமிரைப் போக்கும் வழிதான் எது? வீண் வம்பு பேசுவதும், படாப் பழிபோடுவதும், மோசமாகவே நடிப்பதும் கடைசியில் செருப்படிபட்டு விலகுவதுமாக ஆய்விடுகிறார்கள்.

தனத்தை பறிபாது நான் குழந்தையைக் கொடுத்து நாசமாகி விட்டேன். உன்னுடன் கூட என் குழந்தையை வீடு வீடாக வேலை செய்வதற்கு இது பரியந்தம் அழைத்துச் சென்றது போதும். இனிமேல் வேண்டாம்.'' என்று வயிற்றெரிச்சல் தீரக் கதறினள்.

தான் வந்ததும் வாராததும் இத்தகைய ஆவேச மொழிகளைக் கேட்கப் போவதாக அந்த மாது சற்றும் நினைக்கவில்லை பாகையினல் அவளுடைய கோபம் தலைக்கேறியது; மனம் பறக்கின்றது. திலோத்தமாவின் புருஷனுக்கும் ஆத்திரம் பொங்குகின்றது. அவ்விருவருக்கும் அப்படியே அவர்களை நசுக்கிவிடலாகுமா! என்று தோன்றுகின்றது. திலோத்தமா அப்போது சற்று தெளிவு கண்டு எழுந்தாள். அவள் எழுந்தவுடனே இந்தப் பாதகர்கள் நிற்கும் நிலைமையைக் கண்டு இடிந்துவிட்டாள். "ஐயோ! ஏதோ பெருத்த மோசம் வந்துவிட்டது'' என்று எண்ணி வருந்தியவாறு தாயினிடத்தில் சென்று "அம்மா! நான் உனக்கு எத்தனை எடுத்துரைத்தும் சற்றும் பதிவதில்லை; உன் போக்காகவே நீ பேசிவிடுகிருய். என் தலைவிதியின்படியே நான் நடக்கவேண்டுமே யன்றி அதை மாற்றிவிட இனி ஈசனுலும் ஆகாது. என்னைப்பற்றி இனிமேல் நீ என் கவலை கொள்ளவேண்டும். நான் இறந்துவிட்டதாகவோ, அன்றி உன் வயிற்றில் பிறக்கவில்லை என்றே எண்ணித் தலை முழுகிவிடு. வீணில் சண்டையும் சச்சரவும் சற்றும் நன்றுகவில்லை. என்னுடைய கால கதியின் உண்மையை அக் கடவுன் ஒருவனே அறிவானே யன்றி மனிதர் அறிய முடியாது. நீ இனி ஆத்திரப்பட்டுப் பேசாதே'' என்று கூறினள்.

இதற்குள் திலோத்தமாவின் கணவன் திலோத்தமாவை நோக்கி "உம் வண்டி ஏறு. இனி இவ்வீட்டில் அரை வினடி கூட

கேடுவோன் கேடு நினைப்பான் என்கிற பழமொழியை மறந்து மோசச் சண்டாளர்கள் வேலைசெய்கிருர்கள். வெகு சீக்கிரத்திலேயே அந்தப் பழமொழி அவர்களைத் தாக்காமலிருக்காது. பூனையின் மதியால் பூனை நாசமாக வேண்டியது தான்.

நீ இருக்கலாகாது. உன் தாயின் பவிஷும் மற்ற எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும், என் தாயாரைக் கண்டு வாய் கூசாது சொல்லிய சொற்களை நான் என்றும் மறக்கமாட்டேன். கட்டாயம் அவற்றை நினைவில் கொண்டு அவற்றிற்குச் சரியானபடி நடந்து கொள்வேன். உன்னை உன் மாமனிடத்தில் சேர்த்து வைப்பதற்கே உன் தாயார் உன்னை அழைத்து வந்தாள் என்பதை நான் இப்போது நன்கறிந்துகொண்டேன். உங்கள் கூட்டமே கெட்டுவிட்ட கூட்டம். இந்த ஊழலை யறியாது உன்னை நான் மணந்தது பெருத்த முட்டாள் தனம். தன்னிடம் ஓர் பெரும் குப்பையை வைத்துக்கொண்டு எங்களை—நிரபராதியான என் தாயாரைப்—பார்த்து உன் தாயார் கடுகடுத்து சுடு சாத்தை எவினளே! இருக்கட்டும். உம்; நீ கிளம்பு" என்று கூறிக்கொண்டே அவளை ஒருவிதமாகப் பார்த்தான்.

அந்தப் பார்வையின் நோக்கமாவது, உன்னைப் பிறகு வட்டியும் முதலுமாக வாங்கிவிடுகிறேன் என்று கூறுவது போன்றிருந்தது. அதை அறிந்த திலோத்தமா பதில் பேச்சின்றி வந்து வண்டியில் ஏறப்போனாள். அவள் தாயோ கண்ணீர் விட்டுக் கதறுகிறாள்; இதுகாறும் பொறுமையாக விருந்த அவள் மாமனுக்கு தன்னைப் பற்றி இழிவாகக் கூறிய வார்த்தையைக் கேட்டதும் ஆத்திரம் பொங்கி விட்டது. அவன் திலோத்தமாவின் புருஷனை நோக்கி "ஆகா! அடே சண்டாளா! உன்னைப் போல என்னையும் நினைத்துவிட்டாயோ! பெற்ற தாயார் என்றும் பெறாத தாயார் என்றும் கூறிக் கொண்டு அவளையே உன் வைப்பாட்டியாக வைத்திருக்கும் அனியாயத்தைப் போல நினைத்து உளறுகிறாயா? நாங்கள் எடுத்து வளர்த்த குழந்தையை நீ அனியாயக் கொடுமை செய்வதுடன் அபாண்டப் பழியையுமா சுமற்றுகின்றாய்! சிச்சி; பதரே! என்மீது கூறிய உனக்கு நல்ல கதியே இல்லை. கடவுள் உன்னை ஒரு கை பார்த்துக்கொள்வார். உன் பவிஷுக்கு நீ வாயைத்

அல்ப புத்தியுடைய பைசாசங்களை அடித்துத் துரத்தவேண்டும். அந்தக் கொள்ளியால் அங்கமே அனலாக எரிந்துவிடும். பாவிகளைப் பந்தியினின்றும் விலக்கியபிறகே மணம் பதம் பெறுகின்றது. இத்தகைய கிராதகர்களின் முகத்தில் இதுகாறும் விழித்ததை எண்ணி மனம் ஏங்கவும் செய்கின்றது.

திறந்து பேசவும் வேண்டுமோ! பைசாசத்தினிடத்தில் படிப்பது போல எங்கள் குழந்தையை உன்னிடம் மடித்துவிட்டேன். இனி மேல் அந்த குழந்தையைப் பற்றி நாங்கள் சிந்திப்பதே பிசகு. இறந்துவிட்டதாகவே நாங்கள் நினைத்துவிடுகிறோம். இனிமேல் நீ இவ்விடம் காலை வைத்தால் உன் கதி யாதாகுமோ அறியேன். வெளியே செல். அடீ! திலோத்தமா! உன்னைத் தொலைத்து இன்றோடு நாங்கள் தலை முழுகிவிட்டோம். இனி நீ எக்காரணம் பற்றியும் இவ் வீட்டிற்கு வரவேண்டாம். இன்றே கடைசிதரமாக வைத்துக்கொள்" என்று வெகு ஆத்திரத்துடன் கூறிவிட்டுப் போய்விட்டான். திலோத்தமாவும் பதில் பேசாமல் நேரே சென்று வண்டியில் ஏறி விட்டாள். அவள் கண்கள் நீரைக் கக்குகின்றன. குனிந்த தலை நிமி ராமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அவள் புருஷனும் அந்தப் பிடாரியும் வாய் திறவாது வண்டியிலேறிக்கொண்டதும் வண்டி வீட் டின் வாயலில் வந்து நிற்பதற்குள் அவ்விருவரும் திலோத்தமா வைத் திட்டிய திட்டு கணக்குமில்லை; வழக்குமில்லை. ஒன்றிற்கும் வாயைத் திறந்து பதில் கூறாது மவுனமாகவே உட்கார்ந்து தன் விதியை எண்ணி வருந்திக்கொண்டே இருந்தாள்.

வண்டி வீட்டை யடைந்ததும் மூவரும் இறங்கி உள்ளே சென்றார்கள். திலோத்தமாவின் விசனமும் மனக் கொதிப்பும் தாங்கவே முடியவில்லை. உள்ளே சென்று ஒரு மூலையில் படுத்து விட்டாள். இதைக் கண்ட அவள் புருஷனும் சிங்காரி என்கிற அந்த திமிர் கொண்டவளும் எதிரே சென்று "ஐயோ! ஆசைக் காதலனை விட்டுப் பிரித்து அழைத்து வந்து விட்டதனால் துக்கம் நீங்காமல் பொங்கி வருகிறது பாவம். வெட்கங் கெட்ட நாரியாகிய உங்க அம் மாவுக்கு வாய் ஒரு கேடா! பெண்ணை இஷ்டப்படி ஆடவிட்டு நாட கம் பார்ப்பதற்காகவே அழைத்துச் சென்ற திருட்டுத்தனத்தை நாங்கள் நேரில் பார்த்து விட்டதனால் தலைகால் தெரியாது குதிக்

காமாலைக்காரனுக்குளதை நோக்கினும் மஞ்சளாகத் தெரிவது போல, அல்பசித்தை, மோசம், கபடம், வஞ்சனை, பொறாமை, சிற்றின்பப் பித்து, வேசிவீடு புகுதல் முதலிய துர்க்குணங்கள் நிறைந்த பாவிகள் மனத் திற்கும் கண்ணிற்கும் தம்மைப் போலவே பிறரும் தெரிவரோ என்னவோ!

கின்றாளோ! கள்ளீ! இங்கு பூனையைப் போல நடிக்கும் நீ இல்லாதது பொல்லாதது எல்லாம் எடுத்து ;உளறித்! தீயை மூட்டுவதற்காகவா அங்கு சென்றாய்? பிச்சைக்காரச் சிறுக்கியாகிய உன்னை ஊஞ்சலில் வைத்து ஆட்ட வேண்டுமா!; பஞ்சணையில் சயனிக்கச் செய்து பார்த்து மகிழ வேண்டுமா! ஏனென்றால் ஆயிரமாயிரமாக நீ ரொக்கம் கொண்டு வந்ததோடு ஒவ்வொரு வேலையைச் செய்யவும் தாதிமார்களுடன் உப்போடு முப்பத்திரண்டும் தப்பாது வரிசைகளும், கால் அலம்ப முதல் தண்ணீர் குடிக்கும் வரையில் வெள்ளிப் பாத்திரங்களும் அடுக்காகக் கொண்டு வந்திருக்கிறாயே! அந்தச் செருக்கினால் உன் தலை துள்ளுகின்றதா! அத்தகைய இளவரசியாகிய உனக்கு போக பாக்கியம் குறைந்து விட்டதால் உன் ஆத்தாள் பிதற்றுகின்றாளோ! இத்தனை வரிசைகளோடு வந்திருக்கும் பெண்கள் கூட சில சமயங்களில் வேலை செய்துதான் தீருகிறார்கள். நீ எம்மட்டுமடீ! புழுக்கைச் சிறுக்கி! உன்னுடைய வெட்கங் கெட்டப் பிழைப்பிற்கு உன்னை நாங்கள் வீட்டில் வைத்திருப்பதே அதிசயம். உன் வயிறு வளர்க்க நீ வேலை செய்யாமல் எங்கிருந்தடீ சோறு வந்து வாயில் விழும்? உன்னுடைய சாமார்த்தியத்தினால் ஆனையைத் தூக்கி இருக்கிறாய்; அகழியைத் தாண்டி இருக்கிறாய்! மலையைப் புரட்டி இருக்கிறாய். மழையை நிறுத்தி இருக்கிறாய்; எத்தனை கஷ்டமான வேலைகளைச் செய்து சலித்து விட்டாய் பாவம். சீச்சீ! நீ கெட்ட கேட்டிற்கு வாய் ஒரு கேடா! உன்னைப் பெற்ற வயிற்றிற்குப் பிறண்டை தான் கட்ட வேண்டும். குலத்தில் அடங்காது, கணவனுக்குப் பணியாது, கண்டபடி நாய் போன்று பாழாகும் பெண் பீடையைப் பெற்று விட்டதற்கு உன் அன்னையின் வாய் கிழிந்து விடுகிறது. இத்தகைய ராக்ஷஸப் பெண்ணை—அக்ரமக்காரப் பெண்ணைப்—பெற்ற படுபாவி, என்ற பெயரை—பட்டத்தை—வாங்கிய உன் அன்னை நாற்றத்தை விட என் பாடு நிம்மதி, என்னை

அறிவற்ற முண்டங்களை எத்தனை தரம் செருப்பாலடித்தாலும் அவர்களின் குணம் மாறுவதில்லை. அவர்களின் மோசச் செய்கையும் திருந்துவதில்லை' **ஜென்மத்தில் பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது.** என்கிற பழமொழி சரியாகி விடுகின்றது.

இவ்விதம் ஏசுவாரும் பேசுவாரும்இல்லை. ஐயோ, பாவம்! குழந்தைகளில்லை என்கிற ஒரே விதமான வார்த்தையோடு போகிறது.உன்னைப் பெற்று விட்ட பவிஷுக்கு உன் அன்னை என்னைக் கண்டு கேட்கத் தகாத வார்த்தைகளையா கேட்பது? ஆகட்டும். அவள் கொழுப்பை அடக்குகிறேன். எத்தனை வார்த்தை கூறினாலும் கல்லுபோல உட்கார்ந்திருக்கிறாயே! இது ஓர் பெரிய சாகஸம் என்று நினைக்கிறாயா! நேற்று நீ இங்கு இல்லை என்பது உன் கள்ளக் காதலனுக்குத் தெரியாது போலிருக்கிறது. அதனால் தான் வந்து தேடினான். நாங்கள் அவனை நயமாக விசாரித்ததில் எல்லாவற்றையும் சொன்னான். உன்னுடைய அடக்கம் இவ்வளவு இருக்கிறது. உனக்கு வாயெதற்கடி?'' என்று மழை பெய்வது போல தட தடவென்று கர்ஜனை செய்து பேசினாள்.

இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த அவளுடைய புருஷன் வெகு களிப்புடன் அந்த குடி கெடுக்கும் கோடாரிக் காம்பை நோக்கி "ஆ! என் அம்மா! நீங்கள் கூறியதெல்லாம் வாஸ்தவந்தான். இவள் சாமான்யமானவளன்று. இவளுடைய கண்கள் எந்த நேரமும் பிறத்தியாரையே நாடுகின்றன, அதை நான் பல முறையில் பார்த்திருக்கின்றேன். கள்ளத்தனம் மிகுந்த இவளுடைய நடிகைத் திறம் எல்லோரையும் ஏமாற்றமுறச் செய்வதாக இருக்கின்றதேயன்றி நம்மையொரு போதும் ஏமாற்ற முடியாது.இன்று வண்டியில் வரும்போது கூட வண்டிக்காரனை உற்றுப் பார்த்தாள். அவனும் பார்த்தான். இதில் ஏதோ விஷயமிருக்கிறது என்று நான் அப்போதே தெரிந்து கொண்டேன்.'' என்றான்.

இவ்விதமே இருவரும் சற்றும் சளைக்காமல் வெகு ஆத்திரத்துடன் பேசிய மொழிகளை எல்லாம் கேட்டு மனந் தாங்காது கதறிய

மோசக்காரப் பாவிகளை நாய்க்கும் உவமை கூறலாகாது. நாய் எஜமானிடத்தில் விச்வாசம் காட்டுகின்றது. நாயின் அறிவு கூட இந்தப் பாவிகளிடமில்லை. தாம் உண்டவீட்டிற்கே இரண்டகம் நினைக்கும் துரோகிகளுக்கு உவமை கூற எந்தக்கொடிய மிருகமும் இடந்தராது. ஏனெனில் ஒவ்வொன்றினிடமும் ஒரு நல்ல குணம் இருக்கிறது. இந்தச் சண்டாளர்கள் எதிலும் சேர்ந்தவர்களல்ல. நாகலுக்கும் கடையவர்கள் தான்.

திலோத்தமா ஒரு வார்த்தைகூடப் பதில் பேசவில்லை. ஊமை போலப் படுத்திருந்தாள். பிறகு எழுந்து தன் காரியங்களை முடித்துக் கொண்டு நேரே சாவித்ரி வீட்டை யடைந்தாள்.

நாம், சென்ற 4-வது அதிகாரத்தின் இறுதியில் குறிப்பிட்டவாறு சாவித்ரி தன் புருஷன் நினைவு தடுமாறி வீதித் திண்ணையில் கிடக்கக் கண்டாள். அவனைக் கண்டதும் சாவித்திரியின் உயிரே துடிக்க வாரம்பித்தது; தத்தளிக்கின்றது. அவன் குடித்துள்ள சாராயத்தின் துர்மணம் சுவாசத்தின் வழியே குபீர், குபீர். என்று வீசுகின்றது. இதைக் கண்டு கொண்ட சாவித்ரிக்கு இன்னும் அதிகரித்த விசனமுண்டாகி விட்டது. "ஐயோ! குடித்து விட்டல்லவா இங்கு விழுந்து கிடக்கிறார்! கிண்டி ரேஸில் பணத்தைத் தோற்றுவிட்டு அந்த ஆத்திரம் மறைவதற்குக் குடித்தும் விட்டுக் கடைசியில் இங்கு விழுந்து கிடக்கிறாரே, அண்ணாவை யார் அழைத்து வருவார்கள்?" என்று கூவினாள். இதற்குள் அண்டை அயலில் இருந்து கூட்டம் கூடிவிட்டார்கள். உபகாரம் செய்வதற்கும், ஒத்துழைப்பதற்கும் ஒருவரும் முன்வரமாட்டார்களேயன்றி கூவென்பதற்கு முன்னர் வேடிக்கை பார்ப்பதற்கும் வம்பு பேசுவதற்கும் சமமாகக் கூடிவிடுவார்கள். ஒருவருக்குமேல் இருவர் சேர்ந்தால் பின்னும் பதின்மர் வீதியில் செல்லுவோர்கள் திடும் திடும் என்று நுழைவார்கள். அவர்கள் கூடியதற்கு அனுகூலம் எள்ளளு பிரமாணமேனும் உண்டா! கிடையாது. சாதாரணமான விஷயத்திற்குக் கூட தடபுடலாகப் பேசி பெருத்த காபுரா செய்து "ஐயோ! இப்படி வந்துவிட்டதே! இனி பிழைப்பது உண்டா!" என்று வெகு எளிதில் கூறிவிட்டு சொந்த மனிதர்களைக் கலக்கிவிட்டுப் போய் விடுவார்கள்.

தன் காதலனைக்கண்டு அவனை அடையும்பரியந்தம் இதர விஷயங்களில், சிநேகிதர்களிடத்தில் நினைவு இருக்கிறது. தன் மனோரதம் பூர்த்தியாகி விட்ட பின்னர் எல்லாம் மறைந்துவிடுகின்றது. அவர்களை புதுமாதிரியாகி விடுகிறார்கள். அந்த மனிதர்களைப் பார்ப்பதற்கும் நமக்கு பேட்டி கிடைப்பது அரிதாகிவிடுகிறது. எல்லாம் மாயையின் மகிமைதான். நித்தியமானது எதுவுமில்லை.

இவ்வகையில் அங்கும் கூட்டம் கூடிவிட்டார்கள். அங்கு நாகராஜன் குடிமயக்கத்தினுல் விழுந்துகிடக்கிருன் என்பதைத் தெரிந்துகொண்டதும் தங்கள் தங்கள் போக்காக உளறத்தொடங்கினுர்கள். "குடி வெறியினுல் விழுந்து விட்டான்டா! எங்கே பணம்; கிடைத்ததோ, நன்ருகப் போட்டுவிட்டான். இவன் குடிகாரப் பாவிதானே! எத்தனேயோ விடத்தில் இவன் குடித்து விழுந்து கிடக்கிருன், இதென்னடா புதியது." என்று பேசுகின்றுர்களே யன்றி மதனகோபாலனே அழைத்து வருவதற்கு யாரும் செல்ல முன்வரவில்லே. சாவித்திரி தவித்துக் கொண்டிருக்கையில் திலோத்தமா அங்கு வந்தாள். இந்த அலங்கோலத்தைக் கண்டு மனம் தாங்காமல், "சாவித்ரீ இதென்ன! ஏன் இவர் இவ்விதம் கிடக்கிருர்! எதற்கு இங்கு இத்தனே கூட்டம்?" என்று வெகு கனிகரத்துடன் கேட்டு விஷயத்தை அறிந்துகொண்டதும் தானே ஓட்டமாக ஓடி மதனகோபாலனிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்து அவனே அழைத்துக்கொண்டு ஓடோடி வந்தாள். அதற்குள் சாவித்திரியின் பக்கத்து வீட்டுக்காரன் அவ்விடம் வந்து நாகஸ்வாமியைத் தூக்கிக் கொண்டு போய் உள்ளே சேர்த்தான். குடிமயக்கம் இன்னமும் தெளியவில்லே.

மதனகோபாலன் விரைவில் உள்ளே சென்று "அம்மா, சாவித்திரீ! ஏன் விசனப்படுகிருய்! குடிகாரனின் கதி என்றைக்கும் சதிதான். பாழாய்ப்போன கட்குடியினுல் வருங் கேட்டை அவன் இப்போது உணர்ந்தும் உணரா மூடமாகவே இருக்கிருன். பட்டுத் தேறிய பொட்டைத் தலேயர்களேக் கண்கூடாகக் கண்டு இருப்பினும் அவனுடைய மதியில் அது படாது மதுவையே விரும்புகின்றது. உன்னுடைய தலேவிதிதான் இவ்விதம் ஆட்டுகின்றது" என்று கூறிக்கொண்டே நாகஸ்வாமியின் ஜேபியில் கையை விட்டுப் பார்த்தான். அதில் அன்று காசுமாலேயை அடகு வைத்துப் பணம் வாங்கிய சீட்டு அகப்பட்டது.

சென்ற வருடம் காதலனே எண்ணிச் சிநேகிதருடன் புலம்பிய நான் மறைந்து போய் குதூகலித்து இந்த வருடம் அந்த சிநேகிதர்களேயே மறந்துபோக அடுத்த வருடம் எவ்விதமாகுமோ, யார் கண்டது. எல்லாம் கால விநோதம்.

அந்த சீட்டிலிருந்து ஈகை யிருக்கும் இடத்தைத் தெரிந்து எழுதிக்கொண்டான். அன்று ரேஸில் பணம் தோற்றதையும் அறிந்துகொண்டான். 'நாகஸாமி! நாகஸாமி!' என்று அழைத்தான். குடியின் வெறியினுல் தாறுமாருக உளற வாரம்பித்தான். அவ் வுளறலினுல் மதனகோபாலன் தெரிந்துகொண்டதாவது "அடேய்! வேண்டாம். ஒருவனைக் கொலை செய்து பணம் பறித்தால் நலமில்லை. வேண்டாம் கொல்லாதே! கொல்லாதே! என்றைக் கேனும் நாம் அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்வது. என்னுல் முடியாது. நான் மாட்டேன். நான் எங்கேனும் ஓடிவிடுகிறேன். இவ் வூரில் இல்லை..........சரி! சரி! அந்தப் பெண்ணு! வெகு அழகாயிற்றே! ஓ! அவளுக்கு 10000ரூபாய் கூட தருவதற்குத் தடை யில்லை. ஓ! நிச்சயமாகக் கொடுப்பேன். கட்டாயம் அந்தப் பெண்ணை நிச்சயம் செய்துவிடு. நான் தயாராக மணந்து விடுகிறேன்." என்று குழறி குழறி பேசியதில் நன்ருகத் தெரிந்துகொண்டான். சாவித்ரியும் அவள் அண்ணனும் இம் மொழிகளால் உள்ளம் உருகினுர்கள். மனத்தில் சொல்ல வறியாத திகிலும் குழப்பமும் உண்டாகி விட்டது. திலோத்தமா தன் விசனம் மறைவதற்கு வந்தவிடத்தில் பெரிய கலவரம் உண்டாகிவிட்டதை எண்ணி மிக்க விசனமுற்று இடிந்து போய் உட்கார்ந்துவிட்டாள்.

சாவித்திரி பதறிய மனத்துடன் தன் அண்ணனை நோக்கி "அண்ணு! இதென்ன! கிணறு வெட்ட பூதம் கிளம்புகின்றதே! இவர் செய்துவரும் அட்டூழியங்கள் போதாதென்று கொலை, கொள்ளை முதலியவற்றிலும் இறங்கிவிட்டாரே! ஐயோ! நான் என்ன செய் வேன்? என் கதி ஒருவிதத்திலும் சரியாக வில்லையே! என்னை என் கடவுள் இவ்விதம் பிறப்பித்து ஆட்டுகிருன்?" என்று கண்ணீர் விட்டாள்.

ஒவ்வொரு விநாடியிலும் நடக்கும் விஷயங்கள் அனைத்தையும் எங்கும் வியாபியாகிய மங்களரூபன் அறியாமலில்லை. நன்மைக்கும் தீமைக்கும் அவன் பலனளிக்கவே காத்திருக்கிருன். அவனிருப்பதை மட்டும் யாவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

மதனகோபாலன்:—அம்மா, சாவித்ரீ! நாம் நம்மாலானவரையில் நல் வழியில் திருப்ப முயன்றதெல்லாம் வீணே ஆய்விட்டது. இவனுடைய செய்கையை முற்றும் நீ தெரிந்துகொள்ளவில்லை. எனக்கு எல்லாம் தெரியும். அவைகளை உன்னிடம் ;தெரிவித்தால் உன் மனம் அதிகமாக வருந்துமே என்று நான் சொல்லவில்லை. இந்தப் பயல் ஒருதரம் ஜெயிலுக்குப் போக விருந்தான். நான் அதற்கு ஏதேதோ தந்திரம் செய்து அந்த சமயத்தில் மீட்கச் செய்தேன். அதாவது, சுதேச பக்தி நிறைந்த பெண்மணிகள் அனேகர் திக்கெலாம் கொண்டாடப்படும் தீர சிகாமணி மகாத்மா காந்தி படத்தைக் கையேந்தி பஜனை செய்து ஊர்வலமாக வந்தார்கள். அவ்வமயம் அந்த அற்புதமான காட்சியைக் கண்டதும் என் மனம் ஒரே ஆனந்த மயமாக மாறிப் போய்விட்டது. நான் அங்கு கூட்டங்களை விலக்கும் வாலண்டியர்களுடன் சேர்ந்துகொண்டு சென்றேன். அப்போது உன் புருஷனும் இன்னும் சில சோதாக்களும் எங்களுக்குப் பின்னாலேயே வந்தார்கள். நானதை கவனித்துக்கொண்டேதானிருந்தேன். ஊர்வலம் முடிந்ததும் குறித்த விடத்தில் கூட்டம் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு பெண்ணரசி பேசுகையில் இந்த சோதாக் கூட்டங்கள் எந்த திக்கில் நின்றோ ஒரு கல்லை அக் கூட்டத்து மத்தியில் வீசி எறிந்தார்கள். கல் வந்து விழுந்ததும் பெரிய கலவரம் உண்டாகிவிட்டது. அந்தக் கல் ஒரு பெண்மணியின்மீது விழுந்தது. உடனே எனக்குப் பயமும் திகிலும் உண்டாகிவிட்டது.

அந்தக் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்ட உடனே போலீஸ்காரர்கள் வந்துவிட்டார்கள். இதற்குள்ளாக நான் உன் புருஷனிடத்தில் ஓடிப்போய் "அடே பாவி! உனக்கு இத்தகைய கெடுமதி எங்கிருந்து உண்டாகியதோ தெரியவில்லையே! நீ சேர்ந்திருக்கும்

தங்கள் மனத்தில் "இதுதான் போாநந்த நிலையம். இதுதான் நமது ஜென்மத்தின் சார்த்தகப்பதவி" என்று நினைத்து அத்துறையில் இறங்கி மூழ்கிவிட்ட பின்னர் 'மக்களேது- மனிதரேது. சினேகிதர்களேது. பழயகாலத்து நினைவுகளேது, ஒரு காலத்தில் தான் புலம்பித் தவித்த உணர்ச்சியேது? எல்லாம் மறைந்து மடிந்து கவிழ்ந்து விடுகின்றன.

கூட்டமோ பெரிய கொலைக்கும் அஞ்சாத நெஞ்சமுடையது. அதில் எந்த விதமான குற்றம் நேரிடினும் உன்னையும் கூட அதில் கட்டாயம் சம்பந்தப் படுத்தாமல் போகமாட்டார்கள். என்னுடைய தங்கையின் புருஷனாயிற்றே என்று உனக்கு நான் நல்ல மதி புகட்ட வருகிறேனேயல்லாது வழிப்போக்கனிடம் நான் வார்த்தையே வைத்துக் கொள்ளமாட்டேன். இந்தக் கூட்டத்தின் அழகையும் இதில் தேச பக்தி ததும்புவதையும் பெண்களின் மனோ வீர தீரத்தையும் கண்டும் அவர்கள் இனிமையாகப் பேசும் உபன்யாஸத்தைக் கேட்டும் எந்த மனிதன்தான் இவ்விதம் கல்லெடுத் தெறிவான். தேச பக்தியற்ற மனித ஜென்மம் ஓர் ஜென்மமா! தன்னுடையது என்ற பதத்திற்கு உள்ள மதிப்பும் ச்வாதந்தரியமும் வேறு எதிலாவது உண்டா! அடாடா! அந்தப் பேசும் தெய்வமாகிய காந்தியடிகளின் வார்த்தையைக் கேளாத—அவர் மகிமையை அறியாத மனிதர்களும் உலகில் உண்டா! என்ன ஆச்சரியமான பிறவி! அவர் செய்து வரும் ஒவ்வொரு வேலையின் சாமர்த்தியத்தை நினைக்கின் அதை மனிதரால் செய்யக் கூடியதென்று ஜனங்கள் நினைக்கக் கூடுமா! அவருடைய ஆத்ம சுத்தியும் இருதய பரிசுத்தமும் அவரை நன்குணர்ந்தாருக்கே தெரியுமேயன்றி மற்றோருக்குத் தெரியாது. இப் பெண்மணிகளெல்லாம் தேச பக்தியிலீடுபட்டுக் கதரணிந்து கனிகரத்துடன் செய்யும் காரியத்தைத் தடுப்பதால் உனக்கென்ன லாபம் வந்துவிட்டது? அவர்களைப் போல நீயும் உழைத்து நற்கதியடைய முயலாவிடினும் அதற்குப் பங்கம் செய்யாது இருப்பது உங்களுக்கு எவ்வளவோ புண்ணியமல்லவா! நற் காரியம் செய்பவரைப் பழிப்பதும். அதற்கு விக்கினத்தை விளைவிப்பதும் அவர்களைக் கண்டவாறு தூற்றுவதும் அறிவு கெட்ட அல்ப மதியுடைய ஜனங்களின் வேலையாகிவிட்டது. இக்காரியம் நன்மையா தீமையா! இதைச் செய்வதில் என்ன தப்பிதம். இது உலகத்

தேசிய உணர்ச்சியும் அந்த ஆநந்தமும் ஓர் தனித்த இனிப்புடையது. எத்தகைய மூடர்களின் மனத்திலும் காந்திமகாத்மா என்றால் தம்மையறியாது ஆநந்த ஊற்றும் சுதந்திர உணர்ச்சியும் சுரக்கின்றது. ஆனால் புதிய காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் கதர் கட்டுவதற்குக் கூட கருத்தில்லை காதல் செய்யும் கூற்றோ என்னவோ.

திற்கு மிகவும் பொதுவானதாயிற்றே! இதில் நாமும் சம்மந்தமுற்று உழைக்காமல் வீணாக வம்பு பேசுகிறோமே; என்று சற்று யோசனை செய்து பார்த்தால் அதன் அருமை தெரியும். தான் வந்து ஒத்துழைக்காவிடினும் பிறர் செய்வதையேனும் தூற்றாதிருப்பார்கள். அத்தகைய வார்த்தையைபே—வீண் வம்பை—அறிவு படைத்த எவரும்—படித்து பகுத்தறிவுணர்ந்த எவரும்—ஒருபோதும் சொல்ல மாட்டார்கள். நற்காரியத்திற்குத் தங்களாலான உதவியைச் செய்ய முன் வருவார்கள். நன்மை செய்வோருடன் கலந்து நீ உழைக்கலாகாதா! இத்தகைய தீய லெட்டிலா சேரவேண்டும்? இத்தனை நாள் உன் காலம் முற்றும் பாழாகிவிட்டது. இனியாவது சத்மார்க்கத்தில் பிரவேசிக்கலாகாதா! உன்னுடைய மனத்தில் இந்தக் கூட்டத்தின் மகிமை விளங்காவிடினும் பெண்கள் என்கிற மரியாதையை எண்ணி யாவது பேசாதிருத்தல் கூடாதா! உன்னுடைய சொந்தத்தின் மதிப்பை நீ அறிந்தாலல்லவா மற்றதை அறியப்போகிறாய்! உன் சொந்த மனைவி சொர்ண பிம்பம் போலிருக்கையில் உன் மனம் அவளை விட்டு வேறு குடிசை நுழையத் தாவுகின்றதே அதை விடக் கேவலம் வேறு உளதா! உன்னுடைய கேவலமான தன்மையின் கேட்டினாலேயே உனக்கும் கேடுகாலம் வரப்போகிறது. என் தங்கையும் இறக்கப் போகிறாள். அறிவுள்ளவனுக்குக் கூறுவதில் உபயோக முண்டு. உன்னிடம் கூறி என்ன பயன்? நீங்கள் கல் லெறிந்ததற்கு அதோ போலீஸார் உன்னைப் பார்த்துக்கொண்டு வருகிறார். நீ முதலில் ஓடிவிடு. இல்லையேல் நீயும் இக் கூட்டத்தைச் சேர்ந்தவன்போல நடித்துவிடு. இரண்டுமில்லாவிடில் உன்னை யவர்கள் கைது செய்துவிடுவார்கள், என்று நான் இன்னும் எத்தனையோ விதத்தில் எடுத்துக் கூறினேன்.

அவைகளை எல்லாம் அந்தப் பாவி சற்றும் மதியாமல் என்னையே பதிலுக்குத் திட்டி விட்டு ஓட்டமெடுத்தான். நானே

வந்தே மாதரா கோஷத்தையும் ஜே ஜே கோஷத்தையும் கேட்டு ஆநந்தித்தவர்களுக்கே அதன் மகிமை விளங்கும். சில்கு புடவை கட்டிக்கொண்டு ஷோக்காகத் திரியும் எவருக்கும் அந்த உணர்ச்சி சற்றும் தோன்றாது. பிள்ளை பெற்றவளுக்கே தெரியும் பிள்ளை அருமை.

போலீஸாரிடம் ஏதோ சமாதானம் செய்து உன் பொருட்டாக அவனை மீட்கச் செய்தேன். இது போல இன்னும் எத்தனைக் காரியங்களில் இவன் தலை நுழைகின்றதோ, யாருக்குத் தெரியும். இந்த மனிதனின் குணம் மகா கொடியது. அதற்குத் துணையாக அநேக சகபாடிகள் சேர்ந்திருக்கிறார்கள். என்ன செய்யலாம், சிறு கசப்புள்ள பதார்த்தத்தை நன்றாகச் சமைத்து கூடச் சேர்க்கும் சேர்மானத்தினால் ருசியுண்டாக்கி விடலாம். ஒரே கசப்பாகிய எட்டிக்காயுடன் வேப்பங்காய், பாகற்காய் முதலிய கசப்பு பதார்த்தமே சேர்ந்தால் அதை எவ்விதம் மாற்றுவது. என்ன செய்வது. எத்தனை தரம் சொல்லிய போதிலும் உன் விதி என்று தான் கூற முடியும். என்ன செய்வது?" என்று விசனித்துக் கண்ணீர் உதிர்த்தான்.

இது கேட்ட திலோத்தமா மிக்க விசன மடைந்து "அண்ணா! ஒவ்வொருவருடைய விசனம் ஒவ்வொரு விதமாக விருக்கிறது. தேசபக்தி யாருக்கு நிரம்பி இருக்கிறதோ, அவர்களின் கணவன்மார்கள் நேர் எதிரிடையாக விருக்கிறார்கள். எந்தப் புருஷன் பக்தியுடனிருக்கிறானோ அவன் மனைவி அதற்கு எதிர் சத்ருவாக அமைகிறாள். இந்த தேசத்தின் நிலைமையையும், அதன் மகிமையையும் அறிந்தவர்களின் மனம் அதில் நாட்டமடையாது இருக்குமா? ஒருமிருக்காது. அதை யறியாத மூடர்கள் சிலர்; ஏன் நாம் அதில் தலை போது:பிடவேண்டும் என்கிற மமதை யுள்ளவர்கள் சிலர். இந்த விஷயம் நமக்கு என்ன அளிக்கும்? இதில் ஏன் சேர வேண்டும்; எப்படியானால் கிடக்கட்டும் என்று தெரிந்து கர்வித்து விலகுகிற குள்ள நரிகள், சுயநலப் புலிகள் சிலர்; இரு கக்ஷியிலும் சேராமல் தூர விருந்து வேடிக்கை பார்க்கும் வீணர்கள் சிலர் இவ்விதமான தொகைகளாகப் பிரிந்து விட்டால் தேசத்தின் நிலைமை என்று தான் முன்னேற்றமடையும். கட்டுப்பாடும் நம்முடைய தென்கிற

பஜனை முதலிய தேசிய விஷயங்களில் பெண்கள் ஒத்துழைக்க வந்தால் வெட்கமாம். தன் வீட்டில் ஒரு கல்யாண மென்றால் அப்போது வீதியில் பல தரம் அலைந்தால் அதில் வெட்க மில்லையாம். இதெந்த நியாயமோ தெரியவில்லை. கடவுளின் காரியம் என்பதை ஏன் மறந்து விடுகிறார்களோ தெரியவில்லை.

பற்றுதலும் இருக்குமாயின் எந்த காரியத்திலும் வெற்றி பெறலாம். எல்லாவற்றிற்கும் முதலில் மனத்தில் ஒன்று, வாக்கில் ஒன்று, செய்கையில் ஒன்று, கண்ணோட்டத்தில் ஒன்று, என்று வித்யாசமின்றி மனத் தூய்மையும் பரிசுத்தமுமே மக்களுக்கு வேண்டியது. அது எல்லோருடைய இருதயத்திலும் பரவி விட்டால் நாமும் நமது தேசமும் என்றைக்கோ க்ஷேமத்தை யடைந்திருக்கலாம். நம்முடைய தேசமென்கிற உணர்ச்சி பெரும்பாலோரான மனிதரிடையேதோன்றி இருப்பினும் அதைப் பரிமளிக்கச் செய்யாது பாழாக்கிவிடும் மனிதர்கள் அனேகரிருக்கிறார்கள். மனிதர்களுக்கு முக்கியமானது பரிசுத்தம்.

நாம் எக்காரியத்தைச் செய்யப் புகினும் அக்காரியத்தைச் செய்து வெற்றி பெறக் கூடிய சக்தி முதலில் உதிக்க வேண்டும். அந்த சக்தி உதயமாவதற்கு முதலில் அகத்தில் அழுக்கின்றி தூய்மையான பரிசுத்தம் அத்யவசியமானது. மனத்தில் ஓர் த்ருடமான எண்ணமும் தீர்மானமும் இன்றி எதிலும் சந்தேகம், எதிலும் வழ வழ, கொழ கொழ என்று இருந்தால் அத்தகைய மனத்தில் பரிசுத்தம் உதிப்பதே அரிது. நிஷ்களங்கமான வெள்ளை வஸ்திரத்தில் சாயத்தை ஏற்றினால் ஒரு விநாடியில் பிடித்துக் கொள்வது போல பரிசுத்தமான மனத்தில் எந்த விதமான சத்காரியங்களைச் செய்ய நினைப்பினும் அவைகளில் அது ஈடுபட்டுவிடும். பரிசுத்தத்திற்கும் உறுதிக்கும் வேற்றுமை இருப்பினும் காரியத்தில் பலனை இரண்டும் ஒன்றாகவே கொடுக்கின்றன. மனத்தின் பரிசுத்தமான தன்மையில் தேசபக்தியைப் புகுத்திவிட்டால் அது எக்காலத்திலும் அழியாத பெரும் வேரூன்றிவிடும். பரிசுத்தமான மனத்தில் தோன்றும் எந்த விஷயமும் பரிசுத்தமாகவே நிறைவேறும். பரிசுத்தமான இதயத்தில் தெய்வபக்தி பொருபுறம் தானாகவே ஜொலித்துக்

கணவனும் மனைவியும் எவ்வளவு மன மொத்த ப்ரீதியுடன் விளங்கிய போதிலும் ஏதேனும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் சகஜமாக உண்டாய் விடுகின்றன. அக்காலத்திலுங் கூட ஒருவர் கருத்தை ஒருவர் அறிந்து அவர்கள் இஷ்டப்படியே பதில் பேசி விடுவது உத்தமமாகி விடுகின்றது.

கொண்டிருக்கும். அந்த தெய்வ பக்தியின் பலத்தினுல் அவர்கள் செய்யப்புகும் எல்லாக் காரியத்திற்கும் ஜெயம் உண்டாகிவிடுகின்றது. பரிசுத்தமான மனத்தை உடைய எவரும் பிறரால் போற்றிக் கொண்டாடப்படுகிறுர்களே யன்றி இகழப்படுவதில்லை. பரிசுத்த மனத்தின் போக்கே ஓர் தனித்தது. உலகமெங்கும் நிலை பெற்றப் புகழுடன் விளங்கும் பேசும் தெய்வமாகிய—நடமாடும் கடவுளாகிய—சத்ய அரிச்சந்திரனுக்கு ஒப்பாகிய, சத்குணசம்பன்னனுகிய, பொதுநலத் தொண்டனுகிய மகாத்மா காந்தியடிகளுக்கு இத்தகைய சிறப்பு வாய்த்தது எதனுல்? அவருடைய பரிசுத்தமான இதயத்தினுல் தான். அந்தப் புனித மூர்த்தியின் அகத் தூய்மையை ஜகத்தில் அறியாதோரில்லை. அவருடைய நாமத்தைக் கேட்டவுடன் ஆநந்தப் பரவச மடையாத மக்களில்லை. அவருடைய பரிசுத்தமே அவரை இத்தகைய நிலைமையில் கொண்டு வந்ததென்பதை அறிந்த மக்கள் அனைவரும் தாமும் அத்தகைய பரிசுத்தத்தை அடைந்து அவருடைய தொண்டனுகச் சேரும் அருகதையேனும் பெறுவோம் என்று எல்லோரும் எண்ணி முயல வேண்டுவது கடமையாகும். மோக்ஷத்திற்கு வழி காட்டியாகிய மகாத்மாவின் தெய்வத்தன்மையைக் கூறத்திறமே யன்று.

எந்த காலத்திலும் தன் தேசத்திற்காகத் தான் உயிர் துறந்தால் அவனுக்கு வீரசொர்க்கம் உண்டு என்ற வாக்கியம் சாஸ்திர பூர்வமாக விளங்குகின்றது. அத்தகைய தேசத்தின் நன்மைக்காக தன்னுடைய, உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்துவிட்டுத் தியாகமூர்த்தியாக விளங்கும் காந்தியடிகளின் உத்தரவை சிரமேல் வகித்து எல்லோரும் தேசத் தொண்டாற்ற வேண்டுவது நமது கடமை என்று எண்ணி இனியேனும் பரிசுத்தமான மனத்துடன் ஜனங்கள் ஒன்றுபட்டுழைத்தால் அதன் பலனைக் கடவுள்

தாம் ஒருவரின் கீழ் அடிமையாக விருந்து பணம் சம்பாதிப்பதையே பலர் பெரிய கவுரவமாகக் கொண்டாடுகின்றுர்கள். தமது சொந்த உழைப்பினுல் தாம் தனித்துத் தொழில் செய்து ஜீவிப்பதிலுள்ள கவுரவம் அந்த மனிதர்களுக்குத் தெரிவதில்லை. நம்முடைய சகலமான மதிப்பையும் இவ்விதமே தான் போக்கிக் கொண்டோம்.

நமக்களிக்காது போகமாட்டார். எந்த காரியத்திற்கும் பரிசுத்தம் அவசியமென்பதை அவரவர்கள் தமது ஜீவியத்தில், தினசரி அனுபவத்தில் நன்கு தெரிந்து கொள்ளலாம், பரிசுத்தமான மனத்துடன் பெரியாரை வணங்கினல் அவருடைய ஆசி உடனே நமக்குப் பலிக்கும். பரிசுத்தமான மனத்துடன் ஒருவரிடம் சினேகம் செய்தால் அது என்றும் அழியாது கல்மேல் எழுத்திற்கு நிகராகும். பரிசுத்தமான மனத்துடன் நாம் செய்யும் எந்த காரியத்திற்கும் வெற்றிமாலை கிடைப்பது திண்ணம். அதுபோல நமது பாரதமாதாவின் சேவை செய்யும் விஷயத்தில் பரிசுத்தமான இதயத்துடன் ஜாதி மத பேதமான வேற்றுமையின்றி ஒருமனப்பட்டு ஒத்துழைத்து சுயராஜ்யமென்ற ரதத்தை இழுத்துக் கொண்டுவந்து நிலையில் நிலைக்கச் செய்ய வேண்டுவது நமது கடமை என்று எல்லா மக்களும் கொள்ள வேண்டும். பரிசுத்தத்தின் போக்கே ஒரு தனித்தது. பரிசுத்தம் தான் மக்களுக்கு சகலவிதத்திலும் நன்மையை அளிக்கக் கூடிய பரமதுணையானது. அந்த பரிசுத்தத்தை எல்லோரும் கைக்கொண்டால் நமது நாட்டில் பஞ்சம் நிலைக்குமா! கஞ்சியின்றி மக்கள் தவிப்பார்களா! பரிசுத்தம் மனத்தில் முதலில் கொண்டால் எல்லாம் பரிசுத்தமாக விளங்குமன்றோ! காமாலைக் கண்ணனுக்கு எதைநோக்கினும் மஞ்சள் நிறமாகத்தான் தெரியும். அதுபோல துர்க் குணர்களுக்கு எதுவும் துன்மார்க்கமாகவேதான் தோன்றும், பரிசுத்த ஆத்மாவுக்கு எங்கும் ப்ரம்மதேஜஸுடன் விளங்கும். எங்கு பார்த்தாலும் ஈசன் தரிசனமே தோன்றும். யாரைப்பார்த்தாலும் சத்பாத்திரமாகவே காணப்படும். அண்ணு! உங்களுடைய மனம் எப்போதும் பரிசுத்தமாக விளங்குவதுபோல எல்லோருடைய இதயமும் இருக்கலாகாதா?'' என்று பெரியதோர் பிரசங்கம் போலக் கூறி முடிக்கும்போது நாகசாமிக்குச் சற்று தெளிவு உண்டாயிற்று. அவன் கண்

சினேகித கோஷ்டியுடன் வெளியூருக்குச் செல்லும் குதூகலம் சொல்லத் திறமன்று. அந்த ஆநந்தத்திற்கு நிகர் அது தான். அந்தப் பிரயாணச் சிறப்பும் அங்கு நடக்கும் மரியாதையின் மேன்மையும், சொற்பொழிவுகளின் இனிப்பும் அனுபவித்தால் தான் அறியலாகும்.

ளைத் திறந்து எழுந்தவாறு "அடேய் சிநேகிதனே! ட்ரிங்கு வெரிகுட்; வெரிகுட். இன்னும் ஒரு பாட்டில் இருப்பினும் தள்ளு வேன்............யாரிங்கு? இதென்ன கூட்டம்? ஏனடி! தடிமுண்டை! இதென்ன கூட்டம்? இந்தப் பயல் இங்கு எதற்கு வந்தான். இந்தச் சிறுக்கி எங்கு வந்தாள்?" என்று தாறுமாறாக உளறினன்.

சாவித்ரீ:—ஆகா! நாதா! இதென்ன அக்ரமம்! ஊரார் வீட்டுப் பெண்பிள்ளையை இவ்விதம் துச்சமாகக் கூறுவது நியாயமா? அவள் மனிதர்கள் இதைக் கேட்டால் உங்களைச் சும்மா விடுவார்களா! அண்ணாவைப் போய் இவ்விதம் பேசலாகுமா! உங்களுக்கு எவ் வளவு நன்மையை அவர் செய்திருக்கிறார். இந்தப் பாழுங்குடியினால் நீங்கள் நல்லோரிடத்தில் பொல்லாப்பு அடைவது தருமமா! இந்த அனியாய மதுவைக் குடித்துவிட்டு வீதித்திண்ணையில் பலரும் கண்டு பரிகஸிக்கும்படியாக விழுந்து விட்டது என் மனத்தைப் பிளக்கின்றதே! அந்த அவமானம் உங்களிடத்தில் இல்லையா!

ஆனந்தக் களிப்பு மெட்டு.

1. சண்டாள மதுவைக் குடித்தால்—அது
கண்டார் கைகொட்டி நகைத்திடச் செய்யும்.

2. பண்டோர் பழக்கத்தை யோட்டும்—வெகு
திண்டாட்டத்தில் சிக்கச் செய்திடும்!ஐயோ!

3. கள்ளமதியை அளிக்கும்—பெண்டு
பிள்ளை என்றறியாது பிரித்திடும் உயிரை

4. கொலைபாதகனாகச் செய்யும்—பின்னும்
தலைபோகும் செய்கையில் தைரியமாய்ப் புகுத்தும்

5. வீதியில் ஆடி விழுந்தே—பல
சாதுக்களைத் திட்டி வைதிடச் செய்யும்

வந்தே மாதரம், ஜெய ஜெய கோஷம் முதலியவற்றின் வைபவத்தைப் பூர்ணமாக எங்குக் காணலாமெனில் காங்கிரஸ் பிரசாரத்திற்குச் சென்ற விடத்தில்தான் காணலாம். தேசபக்தியின் மகிமையை அறியாத மிருகத் திற்குக் கூட இந்த 'கோஷத்தின் ஆரவாரம்' மனதில் ஓர் உணர்ச்சியை அளிக்கும்.

6. நோயிக்கிருப்பிடமாகச்—செய்து
நாயைப் போல் சீறி நல்லோரைப் பகைக்கும்

7. தீய எண்ணமே உதிக்கும்—பெற்ற
தாயென்றும் தோன்றாது தடியாலடிக்கும்

8. கைப்பொருள் அனைத்தையும் இழக்கும்—என்றும்
தப்பாது பொய்களைச் சாற்றிடத் துணியும்.

9. துர்க்குணரின் நேசங் கொள்ளும்—நீச
துர்மணங் கள்ளின்மேல் ஆசையும் துள்ளும்

10. அனியாயக் கள் செய்யும் கூற்று—ஐயோ
தினமும் கண்டறிந்தாலும் தெரிந்து கைபேற்றுக்

11. குடிப்பதே சொர்க்க மென்றெண்ணி—அதை
குடித்துக் குடிகெட்டுத் திரிவது நன்றோ!

12. நாதா இனி பேனும் தள்ளும்—பாழும்
போதையளித் திடும் பொல்லாத கள்ளை —சண்டாள

நாதா! இப் பாழுங் கள் செய்யும் கொடுமையை உலகமே அறியுமே! அதை அறிந்து நீங்கள் இவ்விதம் குடித்து விழலாகுமா! இந்தப் பாழுங் கள்ளினால் உண்டாகும் தீமையை நன்கறிந்த மகாத்மா காந்தியடிகள் அதை அடியோடு ஒழிக்கவும், அதை விற்கும் கடை களில் மறியல் முதலியன செய்யவும் ஏற்பாடு செய்து, அந்த மரங் களையே வெட்டி வீழ்த்தவும் பாடு படுவதை நீங்களறியவில்லையா! பெரிய மகானாகிய அவர் வாக்கை நம்பியேனும் இம் மது குடிப்பதை யொழித்திட மாட்டீர்களா!'' என்று சாவித்ரி கெஞ்சிக் கேட்பதை சற்றும் கவனியாத நாகசாமி, "சிச்சீ! மூதேவி காந்தியாம். பூந் தியாம். அவன் ஒரு கொழுத்தக் கடா! வேலையற்று ஜனங்களை எல்

தேசபக்தியில் ஈடுபட்டுள்ளவர்களின் மகிமையை என்னென்பது. அவர்களின் போக்கும் அவர்களின் பிரியமும் கனியிலும் சிறந்து விளங்கு கின்றது. இதற்குக் காரணம் அவர்களின் பரிசுத்தமான மனதே யாகும். மனத் தில் பரிசுத்தம் கொண்டுள்ள எவர்க்கும் மகிமை தானே உதயமாகி விடுகின்றது.

லாம் கெடுக்கிறான். அவனைப் பற்றி என்னிடம் பேசவேண்டாம்.!" என்று கூறிக்கொண்டே சடக்கென்று எழுந்து ஓட்டமாக எங்கேயோ ஓடி விட்டான்.

மதனகோபாலன் தங்கைக்கு ஏதோ தேறுதல் கூறி விட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். திலோத்தமாவும் சாவித்திரியும் மனவருத்தத்துடன் பின்வருமாறு பேசலானார்கள்.

திலோ:—ஸாவித்திரி! நாம் இருவரும் இப்பூமியில் ஜெனித்ததற்கு ஒருவிதமான பலனுமில்லை. என் முடிவு ஒருவிதம், உன் முடிவு ஒருவிதம். நாம் பூர்வ ஜென்மாவில் செய்த பாபமே நமக்கு ஒரு உருவமாக மாறி கணவனாக வந்து வாய்த்துள்ளது. இனி இக்குறை ஆறுவதுமில்லை; தீருவதுமில்லை. உன் கதியை எண்ணி நான் புலம்புவது, என் கதியை எண்ணி நீ புலம்புவது, இதென்ன வெட்கக்கேடு. நாம் இவ்விதமே புலம்பிக் கொண்டு நமது காலத்தை முற்றும் கடத்தினால் நமது ஜென்மத்தின் சார்த்தகமென்ன? நாம் இனி நமது பொழுதை இவ்விதம் செலுத்தலாகாது. எந்த விதமாகவேனும் ஒரு உபகாரத்தை நாம் செய்யவேண்டும். எனக்குக் காங்கிரஸ் தலைவர் ஒருவரைத் தெரியும். அவரிடம் நான் இரண்டு ராட்டினங்கள் கேட்டிருக்கின்றேன். அதில் ஒன்று உனக்குத் தருகிறேன், அதை நீ தினம் உன் துணையாகக் கொண்டு ராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டு வா! ஏற்கெனவே என் வீட்டிலிருக்கும் ராட்டினத்தில் நான் நூல் நூற்று வருகிறேன். இங்கு இரண்டு ராட்டினங்களையும் போட்டுக்கொண்டு நாமிருவரும் இவ்விடத்திலேயே பொழுது போக்காக நூற்கலாம். அதனாலாவது நாம் எடுத்த ஜென்மத்திற்குச் சற்று சிறப்பு உண்டாகட்டும். இனி நாம் கணவனால் ஒரு போதும் சுகப்படப் போவதில்லை. மன அமைதியும் அடையப் போவதில்லை. ஆகையினால் நாம் நமது சரீரத்தை அவர்களின்

எந்த விஷயத்திலும் நம்மைப் பற்றிப் பிறர் திட்டுவது ஒருகாலம்; பிறகு அதே மனிதர் அதே காரியத்தைச் செய்து வேறு சிலரால் அந்த சன்மானத்தைப் பெறுகின்றார்கள். இப்படியே கடைசியில் எல்லோரும் அந்தக் காரியத்தில் ஈடுபட்டுவிடுகின்றார்கள். இது கண்ட அனுபவம்.

வேலைகளைச் செய்யும் விஷயத்தில் கொஞ்சம் உழைப்போம். மற்ற நேரத்தை தேசத்திற்காகப் பாடுபடுவோம். அதுதான் நமக்கு இனி மனமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கக் கூடியது. இன்று சாயங்காலம்........ஹாலில் பெண்களின் பொதுக் கூட்டம் நடைபெறுகின்றதாம்; அதை நான் பத்திரிகையில் படித்தேன். ஆகையினால் அங்கு முதலில் சென்று வருவோம், அண்ணா என்னவோ அங்குக் கட்டாயம் செல்லுவார். கூட நாமும் சென்று வருவோம். என்ன சொல்லுகிறாய்?'' என்று பட படத்து விசனத்துடன் கேட்டாள்.

இதுகேட்ட ஸாவித்திரி ''திலோத்தமா! நீ இந்த விஷயத்தில் இன்று தீர்மானித்தாய்; நான் இதுவிஷயமாக என்றைக்கோ தீர்மானித்து முடிவுசெய்து விட்டேன். என் துயரம் இன்னும் மிஞ்சி விட்டால் நேரே சபர்மதி ஆச்ரமத்திற்கே போய்ச் சேர்ந்து விடுவது என்கிற தீர்மானம் எனக்கு உண்டு. என்ன கஷ்டம்! என்ன பிறவி! இவ்வித இம்சைப்படுவதற்குத் தான் நான் ஜென்மமெடுத்தேன். சரி. இன்று கூட்டத்திற்குக் கட்டாயம் செல்லலாம் என்று முடிவு செய்து கொண்டார்கள். பிறகு திலோத்தமா தன் வீடு சென்று வேலையை முடித்துக்கொண்டு இங்கு வந்தாள். ஸாவித்திரி தன்னுடைய வேலைகளைச் செய்துவிட்டுத் தயாராகவிருந்தாள். இருவரும் மதனகோபாலனுடன் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

அங்கு ஆண்களும் பெண்களும் சுமார் ஐயாயிரத்திற்குக் குறையாமல் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கண்டபோதே ஸாவித்திரி, திலோத்தமா ஆகிய இருவரின் மனமும் ஆநந்தப்பரவசமாயிற்று. அவர்கள் தங்களுடைய பிறவியில் இந்த ஆநந்தத்தை என்றுமே கண்டறியவில்லை. பெண்களின் கூட்டத்தில் இவர்

வெகு சந்தோஷமாகப் பாடிக் களித்த நாள் ஒன்று; தன்னுடைய மனோபீஷ்டம் நிறைவேறாததனால் புலம்பித் தவித்த நாள் ஒன்று. மனோபீஷ்டம் நிறைவேறியபிறகு முன்பு நிகழ்ந்தவற்றையும் சிநேகிதரையும் அறவே மறந்து ஆநந்தக் கடலில் மூழ்கிவிட்ட நாள் ஒன்று.

களும் உட்கார்ந்தார்கள். அங்கு வந்துள்ள ஸ்திரீகளில் அனேகர் கதருடையே தரித் திருந்தார்கள். சிலர் மில் துணியை அணிந் திருந்தார்கள். கூட்டத்தின் ஓர் பாகத்தில் ஒரு நாற்காலியும், மேஜையும், அதன் பக்கலில் பெரிய பெஞ்சுக்களும் போடப்பட் டிருந்தன. குறித்த நேரத்தில் கதருடையே தரித்த நான்கு பெண் ணரசிகள் முகத்தில் தேசபக்தியின் ஜோதி தாண்டவம் புரிய, வசிகரமான தோற்றத்துடன் மந்தகாஸம் செய்து கை குவித்த வண்ணம் நாற்காலியின் அருகில் வந்து நின்றார்கள். அவர்களைச் சூழ்ந்து சுமார் ஆயிரக் கணக்கில் ஜனங்கள் கொடி யேந்தி ஜே ஜே கோஷத்துடனும், மேளவாத்யத்துடனும் வந்து சேர்ந்து அந்த இடத்தில் எள் விழுவதற்கு இடமின்றி உட்கார்ந்து விட்டார்கள். இந்த பெண்ணரசிகள் வந்தவுடனே கர கோஷமும் ஜேஜே கோஷமும் அண்டத்தையளாவியது. அந்தப் பெண் மணிகள் அந்த ஊர் மனிதரல்ல; வெளியூர்க்காரர்கள்; ஆகையினால் இத்தகைய மரியாதை நடந்தது. ஒவ்வொருவருக்கும் மாலை மரி யாதை நடத்திய பிறகு கூட்டத்தைக் கூட்டிவைக்கும் பெரியவர் எழுந்து முதலில் பேசத் தொடங்கினர்.

எனது அன்பு நிறைந்த சகோதர சகோதரிகளே!

இன்று இந்த மாபெரும் கூட்டம் நடைபெறுவதற்குக் காரணம் நமது முன்னர் தோன்றியுள்ள நான்கு வீரப் பெண் ணரசிகளின் விஜயத்தின் பொருட்டாகத் தான் என்பது கூறாமல் விளங்கும். தற்போது நமது தேசம் உள்ள நிலைமை யில் நாம் சற்றும் உணர்ச்சி யற்று நித்திரை செய்வதை அறிந்து நம்மைத் தட்டி எழுப்பி நமது தேசத்தின் நிலைமை

அருமையான பத்திரிகையை வலுக் கட்டாயமாக சிலருக்கு நாம் வரு வித்துக் கொடுத்தாலும் அதை சிரத்தையோடு படிப்பதற்கு ஆசையில்லை. அந்த ஆண்டு செல்ல மறு ஆண்டிற்குச் சந்தா செலுத்த நினைவே இல்லை. பத்திரிகை வி பி யில் வந்தாலும் லக்ஷ்யமின்றி குறைந்த தொகையாகிய சந்தாவைக் கட்டாது திருப்பிவிடுகிறார்கள்- தானாகக் கனிந்த பழமன்றோ ருசிக்கும்... ஆகந்தத்தில் மூழ்கிக் கிடப்பதில் அறிவுக்கு வேண்டியதையும் மறந்து விடுவ தாக உலக மிருக்கிறது.

மையும் அதற்காக நாம் செய்யவேண்டிய வேலையையும் பற்றி எடுத்துரைப்பதற்காக எத்தனையோ மைலுக்கு அப்பாலிருந்து இவர்கள் இங்கு விஜயம் செய்துள்ளார்கள். இந்த நான்கு பெண்மணிகளும் சாமான்யமானவர்களல்ல. அவர்களுடைய வம்சமே மகா பெரியது. அவர்கள் செல்வத்தில் நிகரற்றவர்கள். தேசநலத்தை வேண்டி அதற்குத் தம் தேகத்தை உழைத்து நன்மை கிடைத்த பிறகு தம் பழய மாதிரியான ஆடம்பர வாழ்க்கையை நடத்துவோம் என்னும் விருதங்கொண்ட வீர சிகாமணிகள். இவர்களுடைய கணவன் மார்களும் வெகு மேன்மையான வக்கீல், வியாபாரம், ஆபீஸ் வேலை முதலியன பார்ப்பவர்கள். அவர்களும் தேச சேவையில் தங்கள் சரீரத்தைச் செருப்பாய் மதித்து உழைக்கிறார்கள். சதிபதிகளிருவரும் ஒற்றுமைக்கின்றார்கள். அவர்களுடைய வருகை நமக்கு பெரும் புண்ணியமென்று எண்ணவேண்டும். அவர்கள் சாமானியமாய் வரத் தகுந்தவர்களல்ல. நீங்கள் இதுகாறும் வீண் பொழுதைப் போக்கிவிட்டீர்கள். இனிமேல் இந்த வீரத் தாய்மார்களின் வார்த்தையைக் கேட்டேனும் அவர்களின் பிரசங்கத்திற்கு மதிப்பு வைத்து அவர்கள் கூறும் வழியில் நீங்களும் ஒற்றுமைக்கவேண்டுமென்று நான் உங்களை வெகு வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய கூட்டத்திற்கு நமது பெரியாரின் தேவிகளாகிய சீதா லக்ஷ்மி அம்மாளை அக்கிராசனம் வகிக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்." என்று கூறித் தான் விலகினார். அங்கு முக்யமான சிலர் அதை "நான் ஆமோதித்தேன்" என்றார்கள்.

பிறகு அக்ராசனம் வகிக்கும் அம்மாள் அந்த நாற்காலியினருகில் வந்து நின்று,

---

எல்லாவற்றையும் படிப்பதற்கு ஆசையும் படித்ததை ஆநந்தமாக அனுபவிப்பதற்கு அறிவும் இருக்கின்றவர்களுக்கு எந்த பத்திரிகையையும் தனக்கென்று வரவழைக்க மனம் வருவதில்லை. அநித்யத்திற்குச் செலவிடுவது ஆயிரமாயிரமாகிறது. அறிவுக்கு ஒரு சிறு தொகை செலவிடலாகாதா! சிக்கனமே தடுக்கின்றது.

எனதன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

இந்த மாபெருங் கூட்டத்திற்கு அக்ராசனம் வகிக்கக்கூடிய சக்தி என்னிடம் இல்லை என்பதை நான் தைரியமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். அவ்வாறு அசக்தமாகிய நான் என் இந்தப் பதவி வகிக்க முன் வந்தேன் என்றால் நம்முடைய தேசம் உள்ள நிலைமையில் இந்தப் பேட்டை வாசிகளாகிய நாம் இதுபரியந்தம் விழிக்காது நித்திரை போய்விட்ட பெருந் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்புவதற்கு என்னைப் போன்ற பெண்மணிகளே வீரகர்ஜனையுடன் முன் வந்திருப்பதை நோக்கி என் மனம் வெட்கி நாணிற்று. அந்த உணர்ச்சியை அடைந்தபின்னரே நான் முதலில் நித்திரையினின்று எழுந்தேன். இன்று இக் கூட்டத்திற்கு வருவதற்கு மட்டும் எண்ணினேன். ஆனால் என்னுடைய மனோ வேகம் அந்த மட்டும் விடவில்லை. இன்று இந்தப் புனிதவதிகளின் விஜயத்தைக் கண்ட பிறகே நான் கதர் வஸ்திராலயத்தைத் தேடிச் சென்றேன். நாம் ஒன்றுகூடிக் கதர் கட்டினாலல்லவோ நம்முடைய வாசஸ்தலத்தில் கதர் கிடைக்கும்? ஒரு கதர் கடையிலும் 18 முழம் இல்லாத வருத்தத்தை இன்றே அடைந்தேன். ஐயோ! இன்று கதர் கட்டாது எவ்விதம் அந்தப் பெண்மணிகளைத் தரிசிப்பது. எவ்விதமேனும் கதர் கட்டித்தான் தீருவது என்று தீர்மானித்து விருதம் எடுத்துக் கொண்டேன். என் பர்த்தாவின் வேஷ்டிகளில் இரண்டை எடுத்து ஒன்றாகத் தைத்து அதை நன்றாகத் துவைத்து மஞ்சளில் நனைத்துக் காய வைத்து பிரார்த்தனைக்குத் தக்கப் பிரார்த்தனைத் துணியே உடுத்திக்கொண்டேன். இக்கதரைத் தரித்த மாத்திரத்தில் என்னை யறியாத ஓர் உணர்ச்சியும் மனத்தில் ஆநந்தமும் தோன்றி என்னையே ப்ரமிக்கச் செய்து

தேக அசுகம் ஒருவருக்கு வந்தால் வீடு பூராவும் சனிபோலப் பிடித்து எல்லோரையும் கீழே தள்ளி கஞ்சி கொடுப்பதற்கும் ஆள் இல்லாது செய்து விடுகிறது. சுகமாக விருப்பின் எல்லோரும் சுகமே; எந்த விஷயத்திற்கும் உலகம் இவ்விதம் தான் இருக்கிறது.

விட்டது. நான் பரமானந்த மடைந்தேன். இத்தகைய ஆனந்தத்தை இதுபரியந்தம் அடையாது காலத்தைக் கடத்திவிட்டேனே! நான் இவ்விதமே இன்று சென்ற நான் அடைந்த ஆனந்தத்தை உங்கட்குக் கூறவேண்டுமென்றே நினைத்தேன். இங்கு நான் வந்த விடத்தில் அப் பெண்மணிகளைத் தரிசித்து பின்னும் பேரானந்த மடைந்தேன்; பெற்றவர்க்கே தெரியும் பிள்ளை யருமை, என்பதுபோல தேச பக்தி யுள்ளவர்களுக்கே இந்த மகிமையும் ஆனந்தமும் விளங்குமே யன்றி பெறாத மலடிக்கு அந்த அருமை விளங்காதது போல இத்தகைய உணர்ச்சி யற்றவர்களுக்கு நான் சொல்வ தெல்லாம் ஏளனமாகவே தோன்றும். ஆனால் இன்று ஏளனம் செய்தவர்களே நாளை கட்டாயம்; இவ்விதம் என் கதியைத் தான் அடைவார்கள் என்பது உண்மை. ஏனெனில் ஒரு காலத்தில் நானும் கேவலம் மிருகமாகத் திரிந்துகொண்டு இத்தகைய விஷயத்தின் மகிமை யறியாது ஏளனமே செய்தேன். அந்த நினைவையும் நான் மறந்துவிடவில்லை. ஆகையினால் கூறினேன், என் கணவர் எத்தனையோ வருடமாகக் கதரைத் தவிர வேறொன்றையும் விரலால் கூடத் தொடுவதில்லை. அத்தகைய புண்ணியவானை மணந்த நான் பேயாகத் திரிந்தேன். தேச உணர்ச்சி யற்றுப் பாழாகிவிட்டேன். என்போல இந்நகரவாசிகளாகிய நீங்களும் விழித்துக்கொள்ளும் பொருட்டாகவே குருவியின் தலையில் பனங்காயைக் கட்டியது போல என் தலையில் இந்த அக்கிராசனப் பதவியைக் கட்டிவிட்டதையும் நான் வகித்துக்கொண்டேன். அக்ராசனம் வகிப்பதற்கு நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டாம். மனம் எப்போது திரும்புகின்றதோ அதே நல்ல நாள். நான் இன்று இங்கு அக்ராசனம் வகித்தது போல எனது சகோதரிகளாகிய நீங்களும் அடுத்து அக்ராசனம் வகித்து இத்தகைய

என்றைக்கு அதிகாலையில் எழுந்து ஒரு முக்கிய காரியத்தைக் கவனிக்க நினைக்கின்றோமோ அன்று தான் தன்னை யறியாத தூக்கம் வந்து சுற்றிக் கொண்டு காலை 8 மணிக்கு விழிக்கச் செய்து எல்லா வேலைகளையும் குட்டிச் சுவராக்கி விடுகிறது. நினைத்தவாறு முடிந்தால் நிமலனை நினைப்போமா!

பெருங் கூட்டங்களை அடிக்கடி கூட்டி நமது நாட்டின் க்ஷேமத்திற்கும் பாரதத் தாயின் விடுதலைக்கும் நாம் முன்நின்று உழைத்து நாமும் சார்த்தக மடையவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இன்று பரியந்தம் வீட்டை விட்டு வெளிவாராதவள் என்பது நீங்கள் அறிந்த விஷயம். நான் இந்த மஞ்சள்; கதரைக் கட்டிய பிறகும்! இந்த வீரப் பெண்மணிகளைத் தரிசித்த பிறகும் இக் கூட்டத்தைக் கண்ட பிறகும் என்னை பறியாத; ஓர் சக்தி பிறந்து எனக்கு தைரியத்தை யளித்து விட்டதால் நான் ஏதோ தெரிந்தும் தெரியாமலும் உரைக்க முன் வந்துவிட்டேன். அந்தப் புனிதவதிகளின் பிரசங்கத்தைக்; கேட்பதற்கே நாம் காத்துக் கொண்டிருக்கிறோம்; ஆகையினால் நான் பின்னுரையாகப் பிறகு பேசுகின்றேன். இப்போது அவர்கள் பேசுவதை நீங்கள் வெகு சாந்தத்துடன், கலகம் செய்யாது கேட்க வேண்டுகிறேன்" என்றாள். (எங்கும் கரகோஷம்)

பிறகு அங்கு விஜயம் செய்துள்ள ஸ்திரீகளில்* ஒருத்தியான பங்கஜவல்லி என்ற மின்னாள் எழுந்து நின்றாள். (ஒரே கரகோஷம்) மாலை மரியாதை செய்தபிறகு அந்த அம்மாள் பேசத் தொடங்கினாள்.

எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

இங்கு தலைமை வகித்துள்ள அம்மாள் அவர்களுக்கும் மற்றுமுள்ள யாவருக்கும் எனது பணிவான வந்தனத்தைச் செலுத்துகிறேன். (கரகோஷம்)

தலைமை வகித்துள்ள அம்மாளின் பிரசங்கமும், திடீரென்று உண்டாகிய அவருடைய மாறுதலும் எங்களை ஆச்சரியமுறச்

---

* ஆதியில் கஷ்டப்பட்டவர்கள் பின்னர் சுகப்படுங்காலையில் ஆதியில் தாம் பட்ட கஷ்டங்களை அடியோடு மறந்து இந்த நித்ய சுகத்திலேயே தாம் பிறந்ததாக நினைத்து இதற்கு மிஞ்சி இனி வேறு என்ன வேண்டும் என்று இருந்து சகலத்தையும் மறந்து விடுகிறார்கள். ஆனால் சிலர் என்றும் ஒரே மாதிரியாக இருப்பதோடு ஆதி கஷ்டத்தையே அதிகமாக நினைத்து அதிலிருந்து விடுவித்த கடவுளை வணங்குகின்றார்கள்.

செய்கின்றன. அந்த அம்மாளுடைய மனம் மாறியதுபோல உங்களில் சிலருடைய மனமாவது மாறுதலுற்றுத் திரும்பி விடுமாயின் நம் நாட்டின் க்ஷேமம் இன்றே கைமீது இருக்கிற தென்பதைக் கூறவேண்டாம். நமக்கு தற்போது முக்கிய மானது கதர்தான்.'' என்று கதர் சம்பந்தமான அனேக விஷயங்களை வெகு உருக்கமாகக் கூறித் தன் பேச்சை முடித்துக் கொண்டாள். பிறகு சுகுணவதி அம்மாள் என்பவர்கள் காங்கிரஸ் விஷயத்தையும், மகாத்மா காந்தியின் பெருமை யான தொண்டின் மகிமையையும், தேசபக்தர்களின் தியா கத்தையும் பற்றி வெகு உருக்கமாயும் விரிவாயும் ப்ரசங்கம் செய்தார்கள். அதன் பின்னர் ரேவதியம்மாள் என்பாள் மது விலக்கைப் பற்றிப் பேசி அதிலுள்ள பலவிதமான கேடு களையும் விவரமாக எடுத்துக் கூறிக் கொண்டே வருவதைக் கேட்ட சாவித்ரியின் மனம் குழம்புகின்றது. தன் கணவன் குடி வெறியினால் வீதியில் காண்போர் நகைக்கும் வண் ணம் கிடந்த கோரமான காட்சி அவள் நினைவிற்கு வந்து விட்டது. குடியின் வெறியினாலும், குடிப்பதற்கு முன்னர் இருக்கும் வெறியினாலும் இத்தனை தீங்குகளா நடக்கின்றன. அடடா! என்ன அனியாயம்! நம்முடைய கதியும் இவ்விதம் தான் நடக்குமா!'' என்று பல எண்ணங்கள் தோன்றி விட்ட படியால் மனக்கலக்கம் அதிகரித்து அவள் நிலைமையே மாறிவிட்டது. தன்னையே தான் மறந்துவிட்டாள். அந்தக் கூட்டம் ஓர் பொதுக் கூட்டம் என்பதையும் அடியோடு

உடம்பு சிக்காக இருக்கையில் நித்திரை வருவதில்லை. அப்போது தான் எல்லோரும் 'சற்று நித்திரை செய்' என்று வற்புறுத்துகிறார்கள். சிக்கு தெளிந்த பிறகோ ஓய்ச்சலினால் ஓயாது நித்திரை வருகிறது. அப்போது முன் தூங்கும் படியாகக் கூறியவர்களே "என்ன மூதேவித் தூக்கமோ! எழுந்திரு. அந்த வேலை இருக்கிறது. இந்த வேலை இருக்கிறது. குழந்தை யழுகிறது,'' என்று கூறி சிடு சிடுக்கிறார்கள், இப்போது அந்த கனிகரத்தைக் காட்டினால் நோயாளியின் உடம்பு வெகு விரைவில் குணமாகும் என்பதை சற்றும் கவனிப்பதில்லை.

மறந்து ஆவேசங் கொண்டவளைப் போல தட தட வென்று எழுந்து பேசும், மேடைக் கருகில் சென்றாள்.

அவ்வாறு அவள் சென்று அங்கு வீற்றிருந்த நால்வரின் கால்களிலும் விழுந்து பணிந்து பின் பேசிக்கொண்டிருக்கும் மாதிற்கு வந்தனம் செய்துப் பின் மேடைமேல் ஏறி "என் தாயே! என்னரிய சகோதரியே! மதுவிலக்கைப்பற்றி இதுகாறும் தாங்கள் பேசிவந்ததைக் கேட்க என் மனம் மெழுகாக உருகுகின்றது. நான் கதர் அணியாமல் உங்கள் முன்னிலையில் வருவதற்கும், மேடை மீதேறி நிற்பதற்கும் சிறிதும் யோக்யதை இல்லாதவள் என்பதை நான் பலதரம் ஒப்புக்கொள்வேன். எனினும் மதுவிலக்கு முறையில் தாங்கள் பேசியதைக் கேட்டதும் இதற்கு முன்னால் தலைவி யுள்பட எல்லோரும் பேசியதிலிருந்தும் என் மனம் நன்றாக மாறி விட்டது. பாழுங் கள்ளைக் குடித்துவிட்டு என் பர்த்தா அலைவதையும் அதனால் உண்டாகும் கேடுகளையும் பிரத்யக்ஷமாக அனுபவிக்கின்றேன் அன்றியும் என்போன்ற பெண்கள் தங்கள் புருஷர் குடிப்பதால் உண்டாகும் கேட்டை யனுபவிப்பதைப் பார்த்திருப்பதால்; அந்த அக்ககரமான சம்பவத்தை வயிற்றெரிச்சல் தீரச் சொல்லிவிடவே இங்கு நான் வந்தேன். எனக்குப் பேசத் தெரியாது. படித்தவளன்று; மகாத்மா காந்தியை தற்போது கலியுகத்தில் பேசுந் தெய்வமென்றே சொல்லலாம். அத்தகைய தெய்வத்தின் வாக்கையே நீங்கள் சத்யமாக நம்பிப் பிரசாரம் செய்ய வந்துள்ளமையால் இந்த விடத்திற்கும் தெய்வத்தன்மை பொருந்தியே இருக்கும் என்பது எண்ணம். ஆகையினால் இம் மேடை மீதேறும் பாக்கியம் செய்த எவரும் தெய்வத்தன்மையைப் பெற்றுவிடுவார்கள் என்கிற நம்பிக்கையினால் நான் ஏதோ இரண்டொரு வார்த்தையை ஒருவருடைய அனுமதி இல்லாமலேயே கூற

இந்திய மக்களே அடிமையிலும் அடிமையாகி விட்டார்கள். அதை யறியாத பலர் பின்னும் தாம் அடிமையாக விருந்து பொருளீட்டுவதே பெரிய கவுரவமாக நினைக்கிறார்கள். சொந்தத் தொழிலிலுள்ள மதிப்பும் கவுரவமும் அவர்கள் தெரிந்துகொண்டால் சுயராஜ்ஜியத்தின் மதிப்பையும் நன்கறிந்து உடனே அதற்கு ஒத்துழைக்க முன் வருவார்கள்.

முன் வந்தேன்". என்று தைரியமாகப் பேசி மேலும் ஏதோ வார்த்தைகளை ஆரம்பிக்கையில் அத்தனை ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கிடையிலிருந்து நாகசாமி தனது பெயருக்கு ஏற்றவாறு சீறிக்கொண்டும் கும்பலில் தாவிக்கொண்டும் மேடையருகிற்கு ஓடோடியும் வந்தான். அத்தனை ஜனங்களும் வியப்புற்று நின்றுவிட்டார்கள். மேடையருகில் வந்து ஸாவித்திரியின் காத்தைப் பற்றிக் கீழே இழுத்து அவள் கன்னத்திலும், தலையிலும், முதுகிலுமாக தடார் தடார் என்று அனேக அறைகளை விட்டான்.

இந்த ராக்ஷஸச் செய்கையைக் கண்ட எல்லோரும் துடித்தெழுந்தார்கள். அங்குக் கூடியிருந்த பெருங் கூட்டத்தில் இதுகாறும் அமைதியாக விருந்தது மாறி பரபரப்பும் குழப்பமும் உண்டாகி பெருத்த கலவரமாகிவிட்டதோடு எல்லோரும் மேடையை நோக்கி ஓடத் தொடங்கினர்கள். அங்குள்ள பெண்மணிகளின் தேகங்கள் நடுக்கலுற்று ஆடுகின்றன. ஸாவித்திரி மூர்ச்சையாகி விழுந்தாள்.

7-வது அதிகாரம்

பெருமாள் பெரிய பெருமாளானது

தான் தனது ஆசை நாயகியை விட்டு வெளியூர் போகவேண்டிய நிலைமை வந்துவிட்டதே என்ன செய்வது, என்ற பெருங் கவலைக்குள்ளாகி மனந் தவித்தவாறு உட்கார்ந்திருக்கையில் ரங்கமணி அவ்விடம் வந்து தனக்கு ஏதும் தெரியாதுபோன்று பேசத்தொடங்கி "ஏன் இவ்

ஒருவனுக்கு சாந்தி முகூர்த்தம் ஆவதற்கு முன்னர் தனது உறவினர்களுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்து அதற்குப் பின் திடீரென்று பேசுவதை நிறுத்திவிட்டால் அதற்குக் காரணம் யாது? மனைவியின் கட்டு திட்டந் தான் என்பதற்கு ஐயமுண்டா!

விதம் உட்கார்ந்திருக்கிறீர்கள்? என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

இதை கேட்ட கிருஷ்ணசாமி வெகு சீற்றத்துடன் "போ வெளியில். இங்கு நிற்காதே. படுபாவி! உன்னால்தான் எனக்கு கஷ்டங்கள் நேருகின்றன. இல்லையேல் நான் சுகமாகவிருப்பேன். உன்னுடைய பாழுங் கண் நன்றாகப்பட்டுவிட்டது. என்னைக் கண்டு நீ நிரம்பவும் உருகுவதுபோல ஏன் கேட்கின்றாய்?" என்றான்.

ரங்கமணி.—ஆமாம். என்னால் உங்களுக்கு கஷ்டம் வருவதுதான் சகஜம். உலகத்தில் கட்டிய மனைவிதான கஷ்டங்களை உண்டாக்குவாள். நீங்கள் என்னை ஒருவிதமான கஷ்டத்திற்கும் உள்படுத்தாது வைத்திருப்பது உலகமறியும். நான் உங்களுக்கு கஷ்டம் விளைவிப்பதையும் உலகமறியும். ஏன் இவ்விதம் அநியாயமான வார்த்தைகளைக் கொட்டியளக்கவேண்டும். என்ன காரணத்திற்காக இவ்விதமிருக்கிறீர்கள் என்பதைக் கேட்டால் அதற்கு இத்தனை வார்த்தைகள் சொல்வதுதான் நியாயம். பாழும் வேசியின் மோகம் உங்களை யவ்வாறு பிடித்து வாட்டுகின்றது. அந்தத் துர்ப்புத்தி என்று தொலையப்போகின்றதோ அன்றுதான் இந்த வீட்டிற்கு க்ஷேமம் உண்டாகப்போகிறது. அதுவரையில் இவ்விதம் திண்டாடிக் கண்ணீர் வடிக்கத்தான் நேரும். என் தலைவிதி இது. ஒருவரைக் குறை கூறி உபயோகமென்ன?

கிருஷ்ண.—இது என்ன தொந்தரவு. சனியனே! வெளியில் செல் என்றாலும் போகாது இங்கிருந்தே பிராணனை வாங்குகின்றது பீடை—என்று கூறிக்கொண்டே தடால் என்று எழுந்து தாசி வீட்டிற்கே சென்றான்.

உண்மையான ப்ரியம் யாரிட மிருக்கின்றதோ அவர்களைப் பிரிந்திருக்க நேர்ந்தாலும் முக்யமான காலங்களில் கடவுள் எவ்விதமேனும் சேர்த்துவிடுவார். ப்ரியமற்று மேல் வேஷம் போடுகிறவர்களிடத்தில் கடவுள் அண்ட விடாது ஒருவித காரணத்தினால் பிரித்து விடுகிறார். மனம் போல மாங்கல்யம்.

அவ்வமயம் அம்ருதபாஷிணி ஒருவனேடு பேசிக்கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் கிருஷ்ணசாமியின் வயிற்றில் தீப்பிடித்து எரியவாரம்பித்தது. "என்னை வஞ்சித்துவிட்டு வேறெருவனேடு உறவு கொண்டுவிட்டாளே! ஆஹா! இதென்ன அநியாயம்! என்னை த்ரோகம் செய்துவிட்டு இங்கு வந்துள்ள பாவி யாராகவிருக்கும். அவனைக் கொன்றுவிடுகிறேன் பார்" என்ற ஆத்திரத்தை அபாரமாயடைந்து அம்ருதபாஷிணியின் தனிவிடுதிப் பக்கமாகச் சென்று "அம்ருதம்! அம்ருதம்!" என்று அழைத்தான். பதிலே கிடையாது. வேலைக்காரனை அழைத்துப் பார்த்தான்; பதிலில்லை. அதனுல் ஆத்திரம் முன்னிலும் மூண்டுவிட்டது. அந்த அறையின் கதவருகில் சென்று "அம்ருதம்! நான் கூப்பிடுவது காது கேட்கவில்லையா? கதவைத் திற" என்று கத்தினன்.

அதற்குப் பதில் "இப்பொழுது நீ கூப்பிடுவதற்கு நான் பதில் சொல்லத் தயாராக வில்லை. வீணுகக் கத்த வேண்டாம்." என்று வந்தது. இதைக் கேட்ட கிருஷ்ணன் அளவிலா ஆத்திரத்தையடைந்து, "என்ன! என்ன! இதென்ன புது மாறுதல் உண்டாகி இருக்கிறது. உள்ளே இருக்கிற பயல் யார். அவனை இதோ அதம் செய்து விடுகிறேன் பார். நான் உட்காரும் இடத்தில் வேறு எந்த மனிதன் தைரியமாய் உட்காரத் துணிந்தான்?" என்று பின்னும் கர்ஜித்தான். இந்த வார்த்தையைக் கேட்ட உள்ளிருந்த இருவருக்கும் அபாரமான கோபம் வந்து விட்டது. உடனே அவர்கள் கதவைத் திறந்துகொண்டு உள்ளிருந்து பிரஸன்னமானுர்கள். அங்கு வந்த மனிதனை இன்னுரென்று அறியாத முன்னரே அவனை ஓங்கி ஒரு அறை விடுவதற்குக் கிருஷ்ணன் முன்வந்தான். அம்ருதபாஷிணி அவன் கையைத் தடுத்து, "சீச்சீ! துராத்மா! தூர விலகு. உன்னு

விளக்கெண்ணெய் சாப்பிட வேண்டுமென்று நினைக்கும்.பொழுதே குமட்டலும் வெறுப்பும். அதனுல் பிறகு தேகம் கலகலப்பாக சுகத்தையடையுமே என்பது முதலில் தோன்றுவதில்லை. அவ்விதமே கதரைக் கட்டுவதற்கு ஜனங்கள் "ஐயோ! கனமாக விருக்கிறதே" என்கிருர்கள். அக்கதரினுல்தான் நமக்குப் பெருத்த நிதி கிடைக்கப்போகிறது என்பதை முதலில் நினைக்க மாட்டேனென்கிருர்கள்.

டைய ஆவேசம் அதிகரித்து விட்டதோ! இந்த விடத்தில் இனி உன் எண்ணம் சாயாது. இங்கு வந்திருப்பது யார் என்று அறியாமலேயே கையைப் ஓங்க வந்து விட்டார். உன் பவிஷுக்குப் பிறரை நீ அடிக்கவும் வேண்டுமோ! உன் மனதில் என்றைக்காவது நல்ல எண்ணம் உண்டானலன்றோ நன்மை இன்னதென்று தெரியும். நீ துராக்ருதமான ஜென்மமெடுத்தவன். நல்ல கற்புடைய ஸ்திரீகளை எல்லாம் நாசம் செய்த பாவி நீ என்பதைக் கேட்டதும் எனக்கு உன்மீது கொண்ட வெறுப்புக் கூறத் திறமன்று. நான் தான் தாசி என்ற பாபப் பெயருக்கு அருகதையாகப் பிறந்து விட்டேன். மற்ற உத்தம ஸ்திரீகளை யெல்லாம் நீ கெடுத்து பாழ்ப் படுத்திக் கொன்றவள்ளலை எனது உடன் பிறந்த சோதரராகிய இவர் தெரிவித்தார். அதையறிந்த பிறகு உன் முகத்தில் விழிக்கவும் என் மனம் இடங்கொடுக்கவில்லை. நீ எந்த பாபத்தைச் செய்வதற்கும் அஞ்சா நெஞ்சுடைய தீரன் என்பதை யறிந்தேன். வீட்டில் ரதிபோன்ற மனைவியை விட்டு விட்டு முதலில் என் வீடேறி, மானங்கெட்டு, அறிவு இழந்து, புத்தி மயங்கி, உன் ஜாதிமதத்தின் மேன்மையையும் மதியாது கேவலம் ஓர் அல்ப புத்தியை எண்ணி வந்ததற்கே நான் வெறுக்கவேண்டியவள். என் புத்தியும் மயங்கி விட்டதனுல் நான் கெட்டேன். என்னைப் போன்ற எல்லாப் பெண்களும் தாசிகள் என்று நினைத்து விட்டாயா! சென்றமாதம் நீ சர்க்யூட்டிற்குச் சென்றிருக்கையில் நீ ஓர் நிரபராதியான பெண்ணை அனியாயமாய்க் கற்பழித்த ரகஸியத்தை நான் அறியாமல் என்றுமே இருந்து விடுவேன் என்று எண்ணினுயா! அந்தப் பெண்ணை நீ ஒரு தினம் பாழாக்கி விட்டதற்குப் பலன் அந்தப் பெண் வாழ்நாள் முற்றும் அழுது மடியும் படியாக ஆய் விட்டது. அவளைக் கணவன் வீட்டார் தாய் வீட்டிற்குத் துரத்தி விட்டார்களாம். தாய் வீட்டில் பெற்ற

தேசிய விஷயமாக வெளியில் சென்று ப்ரசங்கம் செய்யும் பொழுதும் இன்னும் அது சம்பந்தமான வேலைகளைச் செய்யும் பொழுதும் நூற்றுக் கணக்கில் ஜனங்கள் கூடவே துணையாக வருவதால் அவர்களுக்குச் சற்றும் பயமோ, அவமானமோ இல்லை. அத்தகையோரை வம்பு பேச வாய் திட்டிக் கொண்டு கிளம்பும் அட்டூழியக்காரர்களிடத்தில் தான் கலக் குப்பை எப்போதும் இருக்கும், இது நிச்சயம்.

தாயார் இல்லையாம். இளையாளாம். அந்த ராக்ஷஸி மூத்தவள் மகளை வைத்துப் படைக்கும் விஷயம் தெரியாதா! அந்த சாக்கைக் கொண்டே என் வீட்டிலும் இருக்கலாதென்று பகிரங்கம் செய்து வீட்டை விட்டு ஓட்டி விட்டாளாம். அந்தப் பெண் இந்த கஷ்டங்களைத் தாங்காது இதோ இக் கடிதத்தை எழுதி என் விலாசத்திற்கு அனுப்பி இருக்கிறாள். நீ இங்கு சிரிப்பாணி படுவதை அந்தப் பெண் எப்படியோ தெரிந்துகொண்டு உனக்குக் கொடுக்கும்படியாகவும் எழுதி இருக்கிறாள். இந்தக் கடிதத்தைப் படித்ததும் என் வயிறு பற்றி எரிந்தது. உன்னைக் காணவும் பிடிக்காத பெரும் கோபமும் இங்குவா; பிறந்தது. இதை இதோ உரத்துப் படிக்கிறேன் கேள். யாடி! எதிர் வீட்டிற்குச் சென்று ரங்கமணியம்மாளை அழைத்து வா!" என்றாள்.

இதைக் கேட்ட அறிவு அழிந்த கிருஷ்ணசாமி இன்னதென்று ஒன்றும் தோன்றாமல் நின்று விட்டான். ரங்கமணியும் அடுத்த க்ஷணத்தில் வந்துசேர்ந்தாள். இன்னதென்று விவரம் தெரியாத ரங்கமணிக்கு தாசியுடன் பேசவும் மனம் கூசுகின்றது. கணவனின் முகத்தைப் பார்த்தால் கொலை செய்துவிட்ட களை தாண்டவமாடுகின்றது. அவளுக்கு விஷயம் தெரியாமையால் சற்றுத் தியங்கி நின்றாள். அம்ருதபாஷிணி ரங்கமணியை நோக்கி "அம்மா! வாருங்கள். இப்படி உட்காருங்கள். ஒருவர் தாசி குலத்தில் பிறந்துவிட்டதனாலேயே அவர்களைக் கேவலமாக மதிக்கக்கூடாது. அவர்களின் தலைவிதி இத்தகைய துறையில் தங்கள் காலத்தைக் கடத்துவது. இது மிக்க கேவலம் என்பதை நான் இப்போதே நன்கு உணர்ந்தேன். முன்னரும் உணர்வேன். என்னால் உன் புருஷன் கெட்டுவிட்டதாக நீ நினைக்கலாம். ஆனால் உன் புருஷனால் தான் நான் கெட்டேன். எனினும் அவனிடம் நான் மற்ற தாசிகளைப்போல இரக்கமற்று பணத்தைக் கரக்கவில்லை என்பதை அவனே யறிவான். நான் ஈ விரக்க

எந்த இடத்திற்குச் சென்றாலும், யாருடன் பேசினாலும் பரிசுத்தமான—களங்கமற்ற—மனத்தினர்களாக இருப்போருக்கு ஒரு குறையு மில்லை. ஊழலை உள்ளடக்கி வேஷம் போடுகிறவர்களுக்கு என்றும் ஆபத்துத் தான். அதற்கு நிம்மதியே இல்லை.

மற்றப் பாவியல்ல. எனக்கு பிறவியிலேயே கடவுள் இளகிய குணத்தைக் கொடுத்திருக்கிறார். கூடியவரையில் பரிசுத்தத்தையும் அளித்திருக்கிறார். நான் இவனுடைய மேல் வேஷத்தைக் கண்டு ஏமாந்தேன் என்றே இப்போது நினைக்கிறேன். இவனுடைய ஓர் அக்ரமமான செய்கையை சமீபத்தில் கண்ட பிறகு என் மனம் உடைந்து விட்டது. இந்தக் கடிதத்தைப் படிக்கிறேன். நீங்களும் கேட்க வேண்டுமென்பதற்கே நான் உங்களை வரவழைத்தேன்” என்று கூறி, கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

“கொலைக்கும் அஞ்சாத அக்ரமப் பதரே! உனக்கு என் வயிற்றெரிச்சல் தீர இடும் சாபம் இது. படு பாவி! நீ பிறந்துள்ள ஜாதி என்ன? குலமென்ன? நான் பிறந்த மேன்மை என்ன? நீ எப்போது வந்தாலும் எங்கள் வீட்டிலேயே இறங்கி என் கணவன் முதலியவர்கள் உன்னை நம்பும்படியாகச் செய்த மாயா ஜாலக் கள்ளனல்லவா நீ! நீ என்னை அனியாயமாகக் கெடுத்த ஓர் தீய காரியத்திற்குக் கடவுள் உன்னை ஒருபோதும் சும்மா விடமாட்டார். உன்னுடைய அக்ரமத்தை எந்தவிதத்தாலும் மறைக்கவே முடியாது. பாவி என்னையே நான் அறியாதிருக்கையில் என் விலையிலா மாணிக்கம்போன்ற கற்பை யழித்ததுடன் நான் அறிந்துச் செய்ததாகவன்றோ நீ அக்காரியத்தை வெளியிட்டாய். சண்டாளா! நீ இந்த ஜென்மத்தில் என்னைச் செய்துவிட்ட பாபமும் கொலையும் உன்னை ஏழேழு ஜென்மாவுக்கும் தொடரும். என் வயிறெரிந்த சாபம் வீணாகாது. என்போன்ற இன்னும் எத்தனை கற்பாசிகளின் ஆயுளை நீ அபகரித்தாயோ! இவ்விதமாக நீ இப்பூமியில் உயிர் வாழ்வதைவிட நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம். அன்றி மனிதர் கண் காணாது ஓடிப்போய்விடலாம்.

வேலைக்காரிகள் வேலையைச் சரியாகச் செய்யாவிடினும் சம்பளத்தையும் குறைக்கலாகாது. என் வேலை சரியாக இல்லை என்றும் கேட்கலாகாது. கேட்டால் கோபம் வந்து விடுகிறது. இருக்கிற வேலைக்கும் மோசம் வந்து விடுகிறது. காலம் அவ்வாறு இருக்கின்றது.

உன் பவிஷுக்கு உனக்கு ஆபீஸ் வேலை பொன்று! சண்டாளா! உன் கள்ள வேஷத்திற்கு ஜபமாலை ஒரு கேடா? மகா புனிதமான ஜபமாலை மகா பாதகனுகிய உன் மேனியில் ஏறுவதற்கு என்ன பாபம் செய்ததோ! கர்ம சண்டாளனுகிய உன் மேனியில் செருப்பு, ஜோடு, துடைப்பக்கட்டை முதலி பன வெல்லாம் ஏறினுல் உனக்கு அழகே யன்றி ஜபமாலை ஏறுவதால் அதன் மகிமை யல்லவா குறைந்துவிடுகின்றது. அடேய் பாதகா! கிராதகா! நீ இன்னும் சற்று நேரம் இவ் விடம் நின்றிருப்பாயெனில் நான் வந்தது வரட்டுமென்று உன் செருப்பினுலேயே அடித்து, சாணத்தைக் கரைத்து உன் தலையில் கொட்டியே இருப்பேன். நான் பிறகு என்ன கதி யானுலும் பாதகமில்லை. உன்னை நான் செருப்பாலடித்தால் என் வயிற்றெரிச்சல் தீர்ந்திருக்கும். அடேய் அதமா! நான் இவ்வமயம் விட்டுவிட்டாலும், என் வயிற்றெரிச்சலின்படி நீ செருப்பு உதை யார் கையிலாவது பிறகு வாங்காது போகமாட் டாய். இது நிச்சயம். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத் தச் சண்டாளனல்லவா நீ! உன் மக்கள் மனைவிகளும் நீயும் கட வுளின் கீழேதான் குடி என்பதை மறக்காதே! துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனுர்த்தம்தான் அந்தக் கடவுள் இருக்கிறுர். எதை மறந்தாலும் இதை மறக்காதே! அம்ருதபாஷிணி என்ற தேவதாசி வீட்டில் நீ அடிமை என்பதை அறிந்து இக்கடி தத்தை அவள் மூலமாகவே அனுப்புகிறேன். நான் இக்கடி தத்தை முடிக்கும் வரையில் உயிருடன் இருக்கின்றேனேயன்றி இது உன்—மகா பாதகனுகிய உன்—கையில் வந்து சேருகிற வரையில் நான் இம்மண்ணுலகில் இருக்கமாட்டேன். இது நிச்சயம். இனி இம்மாதிரியான கொடிய வேலையில் இறங்காதே! உலகத்திலுள்ள பாவைகளின் உயிரை வாங்காதே! சண்டாள

தன் வீட்டில் எத்தனை இருட்டாக விருப்பினும் நடப்பதற்கு சகஜமாக விருக்கிறது. பிறர் வீட்டில் நடக்கவோ தெரிவதில்லை அதே போல தனது தேசத்திற்கு உழைப்பதை சகஜமாக எண்ணி ஜனங்கள் முன் வந்தால் கவலை என்பதே இல்லை.

னக ஆய்விட்டது போதும். இனி ஆகாதே! உன்னுடைய அக்ரமசிந்தைக்கு அந்த அனதை ரக்ஷகனே கூலி கொடுப்பார்.

இங்ஙனம்,
உன்னல்.
மடியப்போகும் பாவி.

இந்த கடிதத்தை அம்ருதம் உரக்கப் படித்துவிட்டதைக் கேட்ட ரங்கமணியின் வயிறு பற்றி எரிகின்றது. தன் கணவன் இத்தகைய சண்டாளத்தனம் செய்துவிட்ட வயிற்றெரிச்சல் அவளை வாட்டி வதைக்கின்றது. க்ருஷ்ணசாமியின் முகத்திலோ கொலை செய்துவிட்ட களை நன்ருக வந்து சூழ்ந்துவிட்டது. தலை குனிந்துவிட்டதே யன்றி நிமிரவில்லை. அம்ருதபாஷிணி வாயில் வந்தவாறு திட்டி "இனி இவ்விடத்தில் நிற்காதே ஓடிவிடு.' என்று கண்டிப்பாக அனுப்பிவிட்டாள். ரங்கமணி கண்ணீர் பெருகியவாறு கலங்கிய உள்ளத்துடன் தன் வீட்டைநோக்கிச் சென்ருள். பின்னர் கிருஷ்ணசாமியும் வந்தான். அவனைக் கண்ட ரங்கமணி "ஆகா! நீங்கள் வேசி வீடு மட்டும் நுழைவதாகவன்ருே நினைத்திருந்தேன்! இவ்விதம் கொலை செய்யவுமா கிளம்பிவிட்டீர்கள். அநியாயமே! இவ்விதமும் உங்கள் மதி அழிந்துவிடுமா! நீங்கள் இவ்விதமே உலகில் சண்டாள கோஷ்டியில் சேர்ந்துத் திரியும் குணம் கொண்டவர்கள் என்னை ஏன் விவாகம் செய்துகொள்ளவேண்டும். குடும்பமென்றும் கொள்ளி என்றும், மக்கள் என்றும் மனைவி என்றும் இந்த க்ரகசாரங்களை ஏன் விரும்பவேண்டும். ஐயோ! உங்களுடைய அக்ரமச் செய்கைக்காக அந்த உத்தமி உயிரைவிட்டதுபோல உங்களுடைய துராக்ருதமான செய்கைக்கு நீங்கள் அடியோடு எல்லோரும் தற்கொலைதான் செய்துகொள்ளவேண்டும். இத்தகைய உங்களிடத்தில் உயிர் வாழ்வதைவிட என்று என்னுயிர் நீங்குமோ அன்றுதான்

ஓர் கலியாண வீட்டின் தடபுடலில் முதலில் எடுத்துத் தெரிவதென்ன வெனில் குழந்தைகளின் அழுகை கோஷம் ஒருபுறமும், விளையாட்டுக் கோஷம் ஒருபுறமும் தான் அவை காதையே செவிடுபடச் செய்கின்றன.

நான் சுகப்பட்டவளாவேன். நான் வீட்டில் எடுத்துரைக்கும் வார்த்தைகள் எல்லாம் உங்களுக்கு நஞ்சாயும் நமனாயும் தோன்றுகின்றன. வெளியாரிடம் வார்த்தை கேட்பது உங்களுக்கு லட்டு, மிட்டாய் போல இனிக்கின்றதோ, என்னவோ! உம். நான் செய்த பாவமே என்றுதான் நான் உலகையே வெறுக்கிறேன்." என்று தன் ஆத்திரம் தீர இன்னும் ஏதேதோ சொல்லிப் பின் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

கொலைக்கும் அஞ்சாத கிருஷ்ணசாமி ஒன்றும் தோன்றாது பயித்தியக்காரன்போல இருந்தான். இவ்விதம் நான்கு நாட்கள் செல்ல அதற்குமேல் அவனை வேறு ஊருக்கு மாற்றிவிட்டதை பறிவிக்கும் கடிதம் வந்துவிட்டது. அதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டு அவர்கள் வேறு ஊருக்குப் பிரயாணமாகி அங்குவந்து சேர்ந்தார்கள். ரங்கமணி முன்போல ஸாவித்ரி, திலோத்தமா, மதனகோபாலன் முதலியோரைப் பார்க்கக் கூடாது போய்விட்டது. எனினும் தன் புருஷன் இம்மட்டுடனாவது தூர்த்தத் தன்மையின்றும் விலகுவானா! என்று எதிர்பார்த்து வந்தாள். ஜென்மத்தில் பிறந்தது செருப்பாலடித்தாலும் போகுமா! என்பதுபோல ஜென்மத்தின் காரியமாகவே கொண்ட க்ருஷ்ணசாமி அவன் குடிவந்துள்ள எதிர் வீட்டிலிருந்த ஒரு சிறிய விதந்துவினிடம் நட்பு கொண்டு மீண்டும் ஆட்டங்களே ஆடத் தொடங்கினான்.

இந்த க்ருஷ்ணசாமி உண்மையில் செய்த ஆபாசங்களை விவரித்து எழுதுவதற்கே மனங் கூசுகின்றது. வெறுக்கின்றது. கதையில் கற்பனையினால் ஒருவனைக் கெட்டவனாக வரைவதைவிட நேரில் ஒருவன் கொலைசெய்வதற்கும் அஞ்சாத காரியங்களைச் செய்திருப்பதால் முக்கியமான சாரம் இருப்பதை மட்டும் விவரிக்கவே இதை எழுதத் துணிந்தேன்.

தினம் எவ்வளவு நல்ல ஜலம் கொணர்ந்து வைத்தாலும் அப்போது தாக மில்லை. ஒரு தினம் வைக்காமல் மறந்துவிட்டால் அன்றுதான் வீட்டில் முக்யஸ்தருக்கு தாகம் நாவுலர்ந்து விடுகின்றது. தண்ணீர் தினம் வைப்பதற்கு ஒருவித பாடலுமில்லை. வைக்காத அன்று பெருத்த திட்டுப் பாடல் கிடைத்து விடுகின்றது. நடு நிசியில் ஓடித் தண்ணீர் கொண்டு வர நேருகிறது.

க்ருஷ்ணசாமி அவனுடைய நீசபுத்தியின்படியே பலவித மாகக் கெட்டு அலையத் தொடங்கினான். அங்கு அவனுக்கு இரு சகலபாடிகளும் சேர்ந்தார்கள். அவர்களோடு க்ருஷ்ணசாமி சேர்ந்து கொண்டு பலமான பம்பர ஆட்டம் ஆடத் தொடங் கினான். அந்த வகையில் குடும்பத்தைக் கவனிப்பதை அடி யோடு மறந்தான். தனது ஆபீஸ் வேலைகளையும் கவனிக்காது முன் போலவே இங்கும் ஆரம்பித்தான். இதனால் மனைவிக்கும் புருஷ னுக்கும் பெருத்த யுத்தமே நடக்கத் தொடங்கியது. க்ருஷ்ணசாமி யின் சகோதரன் சோமசாமி என்பவன் வெளியூரில் வேலையாக இருப்பவன். அவனுக்கு அனாவசியமாக ஓர் அவசரத் தந்தி கொடுத்து அவனை வரவழைத்தான். சோமசாமியும் தனது அண்ண னுக்கு ஏதோ ஆபத்தென்று எண்ணி ஓடிவந்து விசாரிக்கையில் "எனக்கும் என் மனைவிக்கும் சண்டை; அதை விலக்குவதற்காக உன்னை அழைத்தேன். மனைவி அநியாயம் செய்கிறாள்" என்று அவன் முதலில் மூட்டையை அவிழ்த்தான்.

இந்த வார்த்தையைக் கேட்ட ரங்கமணியின் வயிறு பற்றி எரிந்தது. அவள் மைத்துனனென்கிற மரியாதையையும் கவனி யாது அவரிடத்திலேயே நேரில் சென்று தன் கணவனின் விஷயங் களனைத்தையும் எடுத்துக் கூறி அவனால் குடும்பம் படும் பாட்டை யும் நன்றாக விளக்கிக் காட்டி அதைக் கண்டிக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். இதைக் கேட்ட வந்த ஆசாமி தன் அண்ணன் செய்கையை வெறுத்துக் கூறி அவனைத் திட்டினான். "அண்ணா! நீ இவ்விதம் அநியாயம் செய்வது அழகல்ல. குழந்தை களை வைத்துக் கொண்டு அவள் என்ன செய்வாள் பாவம். நீ எல்லாம் தெரிந்தும் இந்த விஷயத்தில் இவ்விதம் கேவலமாகி விடு வது நமது கூட்டத்திற்கே ஈனமாயிற்றே! நீ இதை கவனிக்க வேண்டாமா! எல்லோரையும் பழிக்கக் கூடிய மேன்மையில் நாம்

கல்யாணம் முதலிய சுபதினத்தில் தான் கட்டாயம் மழை வந்து கெடுத்து விடுகின்றது. அன்று தவிர மற்ற தினத்தில் மழையை எதிர் பார்க்கும் பொழுது அனல் காற்றுதான் வாரி யடிக்கின்றது. எதிர் பார்ப்பது கிடைத்துவிடின் ஜனங்களுக்கு வருத்தமேன்?

21033

இருப்பதை விட்டு நம்மை ஒருவர் இகழாகப் பேசும்படியாய் நாம் நடப்பது அவமானத்திலும் அவமானமன்றோ! ஏன் உனக் கிவ் விதம் புத்தி கெட்டுவிட்டது. நீ இவ்விதமாகி விடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. நமது பெற்றோருக்கும் மற்றோருக்கும் உன்னால் பெருத்த அவமானம் உண்டாவதை நீ கவனிக்க வேண் டாமா!" என்று பல விதமாகக் கண்டித்தான். அதன் பிறகு இரு வரும் போஜனத்தை முடித்துக் கொண்டதும் க்ருஷ்ணசாமி வழக் கம் போல எதிர் வீட்டிற்குப் போய்விட்டான். க்ருஷ்ணசாமியை ஓர் முக்கிய காரியமாக சோமசாமி தேடினான். வீட்டிலில்லாமையி னால் "எதிர் வீட்டிலிருப்பார் சென்று பார்க்கலாம் என்று" ரங்கமணி தெரிவித்தாள். அவ்விடத்திற்குச் சோமசாமி சென்றான். க்ருஷ்ண சாமியும் அந்த பெண்ணும் உட்கார்ந்துப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு சற்றுத் தியங்கி நின்றான். உடனே அந்தப் பெண் "வாருங்கள்; வாருங்கள்." என்று கூப்பிட்டு ஓராசனமளித்து உட் காரச்செய்தாள்.

"எல்லோரையும் சொல்லுமாம் பல்லி; தான் போய்க் காடிப் பானையில் விழுமாம்" என்பது போல இத்தனைநேரம் அண்ணனைப் பழித்துக் கூறிய தம்பி இங்கு "அவன் தம்பி அங்கதன்" என்கிற நிலைமையில் சமானமாக உட்கார்ந்தான். இவனுடைய பார்வை பூராவும் அந்தப் பெண்மீதே விழுந்து விட்டது. தான் வந்த காரி யத்தையும், தான் சற்றுமுன் பேசிய காரியத்தையும் அடியோடு மறந்தான். அவனுடைய சித்தமும் விகாரமுற்றது. தேன் குடித்த நரிபோன்று பல்லைப் பிளந்துகொண்டு அங்கு சட்டமாய் உட்கார்ந்து விட்டான். அந்தப் பெண் இவனுக்கு வெத்திலை பாக்குக் கொடுத் தாள். அதை வாங்கி நன்றாகப் போட்டுக் கொண்டான். அவ்விடத் திலேயே ஆநந்தமாகப் பேசிக் கொண்டு அமர்ந்து விட்டான்.

சிநேகமாக இருந்த நாளின் நிலைமையையும் சிநேகிதர்களையும் அடி யோடு சிலர் மறந்து விடுகிறார்கள். அவ்வாறு மறப்பதற்கு அவர்கள் மனம் எவ் விதம் தான் துணிகின்றதோ தெரியவில்லை. எத்தகைய பேரின்பமாக நினைத்து ஒரு விஷயத்தில் ஈடுபட்டு மூழ்கி இருப்பினும் சிநேகிதர்களின் நினைவற்று விடுவதும், ஒரு கடிதத்திற்குப் பஞ்சமாகி விடுதும் இக் கலிகாலத்தின் கோலம் போலும்,

வீட்டில் ரங்கமணி, சென்ற மனிதன் இன்னும் வராமையினல் வெகு வெகு யோசனைக் குள்ளானுள். நேரம் சென்றுகொண்டே இருக்கிறது. சற்று பொறுத்துப்பார்த்து பின் ரங்கமணியே எதிர் வீட்டிற்குச் சென்றுள். அங்கு மும்மூர்த்திகளும் ஆநந்தமாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும் மனம் பதற ஆரம் பித்தது. தனது மைத்துனன் இது பரியந்தம் பேசிய வேதாந்த மெல்லாம் மறந்து இவ்விதம் தானும் கூட வந்து அமர்ந்து விட்டதை எண்ண வயிறு பற்றி எரிகின்றது. அவனை நோக்கி ''பேஷ்! வெகு அழகாக இருக்கிறது. பெருமாள் என்கிற பெயர் மாறி பெரிய பெருமாள் என்று வந்தது போல அவரை நீங்கள் கண்டித்துத் திருத்த வந்தது போக இவ்விடத்தில் நீங்களும் ஐக்கியமாகி விட்ட வெட்கக்கேடு வெகு அழகாக விருக்கின்றது. உங்கள் செய்கையை நீங்களே மறந்து விட்டீர்களா! எந்தக் காரியத்தை உத்தேசித்து இங்கு வந்தீர்கள். இங்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று ரங்கமணி சற்று கூச்சலிட்டாள்.

இது கேட்ட சோமசாமி சற்று கோபமேயடைந்து, "மன்னி! போதும்! போதும்! நிறுத்து. உன்னுடைய ப்ரசங்கத்தை நீட்ட வேண்டாம். நீ என்னை அதிகாரம் செய்வது போலத் தான் அண்ணாவையும் அனியாயமாகக் கோபித்துச் சண்டை செய்திருக் கலாம் என்று இப்போது நினைக்கிறேன். என்னைப் பற்றி நீ கவலைப் படவேண்டாம். புருஷனின் விவகாரத்தில் பெண்பிள்ளைகள் இவ் விதம் தலையிடுவது மிகவும் பிசகு. அதை அறியாது வீணாக ஒரு காரியத்தில் ப்ரவேசிக்காதே. உன்னுடைய மனத்தில்தான் அக் கறை அதிகம் என்று நினைத்து விடாதே. எங்களுக்கு எழுந்து வரு வதற்குத் தெரியும். நீ வீணாக இங்கு வந்தது சரியில்லை; வீட்டிற்குப் போ" என்று மானங் கெட்ட அதட்டினுன்.

பிறகு என்றைக்கேனும் எதிர்பாராது சந்திக்கும்படியாக நேர்ந்த காலத் திலோ "நான், உன்னை ஒரு நிமிடமும் மறக்க வில்லை. சதா நினைத்துத் தான் வருகிறேன்". என்று அதற்குப் பொருத்தமாகப் பேசிவிடுகிறார்கள். இதி லென்ன உபயோகம். ஒருவருக் கொருவர் முகங் கூட மறந்து விடும் நிலைமை யில் இருப்பதும் பிறகு மறக்க வில்லை என்பதும் ஓர் பெரிய வேடிக்கையே!

இதைக் கேட்ட க்ருஷ்ணசாமி "சோமு! இப்போது பார்த்தாயோ இல்லையோ! இதே உபத்திரவந்தான் தினம் தினம் நடக்கிறது. மனிதருக்கு மனிதர் வாய்ப் பேச்சு பேசுவதற்குக் கூட சட்டம் விதியுண்டு போலிருக்கிறது. நான் இந்த வீட்டிற்கு வருவதே இந்த மகராஜியின் வயிற்றில் தீ மூண்டுவிடுகின்றது. வீணுக்காகிலும் இத்தகைய பிடாரித்தனம் செய்து, தினம் விடிந்ததுமுதல் படுக்கும் வரையில் சண்டைக்கு இழுத்துக்கொண்டே இருப்பதுதான் வழக்கம். இந்த உபத்திரவமே தாங்காது என் தேகம் மெலிந்துவிடுகிறது. இந்த சண்டை ஒழியும் நாளே இல்லை. இந்த வீட்டிற்கு வந்தால் அவள் அப்பன்வீட்டு ஆஸ்தி முழுகிப்போவது என்னடா, நீயே சொல்லு, என்னுடைய ப்ராணனை வாங்குவதற்கே இவள் வந்திருக்கிறாள். இந்த உபத்திரவத்தை இவள் என்று கைவிடுவாளோ, அன்றுதான் நான் நிம்மதியடைவேன்" என்று தன் போக்காக இதுதான் சமயம் என்று அன்னியரின் முன்னிலையில் கண்டவாறு அவளைத் திட்டியதோடு, வீட்டிற்குப் போகும்படியாகக் கண்டித்தான்.

இந்த அனியாயத்தைக் கேட்ட ரங்கமணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. வயிறு பற்றி எரிகின்றது. அண்ணன் வழியிலேயே தம்பியும் சேர்ந்துவிட்ட ஆச்சரியமும் அருவருப்பும் தாங்க மாட்டாமல் அவள் ஆவேசத்துடன் பேசத் தொடங்கி "ஐயோ! அக்ரமமே! இந்த அனியாயத்தைக் கேட்பதற்கு மனிதரால் ஆகவே ஆகாது. நீங்கள் 'கடவுள் ஒருவர் இருக்கிறார்' என்பதை அறவே மறந்துவிட்டீர்கள். உங்களுடைய இந்த அனியாயச் செய்கை என்னைப் புண்படுத்துகின்றது. 'ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளை ஒக்கும்' என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள். உங்க

அறிவும் அன்பும் தெய்வீகமான வாத்ஸல்யமும் நிறைந்துள்ள பெரியாரின் வீட்டிற்குச் செல்லவும் அவர்களோடு நல்ல விஷயமாக சம்பாஷித்து அரிய விஷயங்களை அறிந்து கொள்ளவும் மனம் தாவுகின்றது. அவ்வாறு செய்வது பேரானந்தமாயு மிருக்கிறது. அவர்கள் நம்மிடம் காட்டும் அன்பின் மகிமையை நினைக்க இறந்துவிட்ட பெற்றோரே நேரில் வந்து விட்டதாக மனம் நிச்சயமாக நம்பி விடுகின்றது. யாவும் அவனருள்.

ளுடைய காரியம் ! உங்களுக்குத்தான் அடுக்குமேயன்றி தெய்வத்திற்கு சற்றும் பொருத்தமாகாது. அனியாயமாய் இந்த விதவைப் பெண்ணை நீங்கள் கெடுத்துவிட்டதனால் அவளுக்கு இதனால்—நேரக்கூடிய பெரும் விபத்தொன்று இருக்கின்றது. அதன் மூலம் அவள் உயிரே பிரியுமோ, அன்றி உங்கள் தலைக்கே கல்லாக முடியுமோ! தெரியவில்லை. வேண்டாம்; இத்தகைய அடாத செய்கையில் தலையிடவேண்டாம். என்னுடைய ஆத்திரம் பொங்குவதால் நான் இதமாக உரைக்கிறேன். இந்தப் பெண்ணின் சொந்த மனிதர்களுக்கு இந்த அக்ரமம் தெரிந்துவிடின் விபரீதமாகும். அடீ! சொர்ணம்மா! உனக்கு ஏன் இவ்விதம் மதியழிந்துவிட்டது? உன் தலை விதி நீ விதவையாகக் கிடக்கவேண்டி இருக்கையில் நீ பிறர் குடியை ஏனடீ இப்படிக் கெடுக்கிறாய்? உன்னுடைய ஜென்மாந்திரத்தின் பாபங்கள் ஒன்றுகூடி உன்னையே மூலையில் அடைத்துவிட்டன. அது போதாதென்று இவ்விதம் ஏன் பாழாகிச் சாகப்போகிறாய்? உனக்கு இஷ்டம் இருப்பின் லக்ஷணமாக மறுமணம் செய்து கொண்டு ஒருவனுடன் ஒத்து வாழ்ந்தால் பிறர் குடிகெடுக்கும் அனியாயத்திலிருந்து மீள்வாயே! உன்னுடைய கெட்ட காலத்தின் போக்கு உன்னைப் பாழ்படச் செய்துவிடுமேயன்றி ஒருபோதும் சுகமுறச் செய்யாது. இதை உறுதியாக நம்பு. உன்னுடைய நல்ல காலத்திற்கும் சந்தோஷத்திற்கும் நீ பாடுபட்டால் உனக்கிசைந்த ஒருவனை மணந்துகொள். வீணாக என்னைக் கெடுக்கும் கொள்ளியாகாதே! ஊர் நகைக்கும் உதவாப் பண்டமாகாதே! என் வயிறெரியும்படியான கருவியாகாதே! அக்ரமம் என்றும் அழிந்தே போகும். நியாயம்தான் நிலைநின்றுதவும். என் குழந்தைகளும் நானும் சந்தியில் நின்று சாபமிடுவதை நீ தடுக்கவும் அந்த சாபத்தினின்று விலகவும் ஒருபோதும் முடியாது. என்னைப்போல நீயும் அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். இந்த அக்ரமச் செய்கை

வேடிக்கை பார்க்கும் கூட்டத்தின் எண்ணிக்கையே எந்த விஷயத்திலும், எந்த விடத்திலும், எந்த காரியத்திலும் அதிகமாக விருக்கின்றது. உண்மையாக உழைப்பவர்களோ, ஆத்மார்த்தகமாய்க் கடவுளை தரிசிப்பவர்களோ, ஆநந்த மறிந்து சங்கீதம் கேட்பவர்களோ, தேசபக்தி யறிந்து ஈடு பட வருபவர்களோ காணவில்லை.

களை ஊரார் நம்பவும் மாட்டார்கள். கதைகளில் வருவதற்கு மேலான விஷயங்களெல்லாம் பாழாய்ப்போன நீங்களே நடத்திக் காட்டுகிறீர்கள். வேண்டாம். இம்மட்டுடன் விலகிக்கொள்ளுங்கள்." என்று சரமாரியாகத் திட்டினுள்.

இந்த பேரிரைச்சலையும் ஆத்திர மொழிகளையும் கேட்ட சொர்ணம்மாளுக்குக் கோபம் பொங்கிவிட்டது. ஆவேசங் கொண்டவள்போல எழுந்து ரங்கமணியை நோக்கி "உன்னை இவ்வீட்டிற்கு வரச்சொல்லியது யார்! யாருடைய அனுமதியின்பேரில் நீ இந்த வீட்டிற்கு வந்தாய்? வந்தது மன்னியில் உளறுகின்ருயா?" என்று திட்டவாரம்பித்தாள். உடனே ரங்கமணி அங்கு நிற்காமல் ஏதோ யோசனை செய்தவாறு அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள். இந்த துக்கம் அவளால் சகிக்கக் கூடவில்லை. அவள் இதற்கு என்ன செய்வதென்ற யோசனையிலேயே ஆழ்ந்தாள். அவளுடைய மைத்துனன் ஊருக்குச் சென்றுன். பெருமாள் பெரிய பெருமாள் ஆனது போல அடிக்கடி சோமு இங்கு வரத் தலைப்பட்டான்.

இவ்விதமே சில மாதங்களாயிற்று. சொர்ணம்மாளுடைய பெற்றோர்கள் காசியாத்திரை சென்றிருந்தவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குத் தமது பெண்ணின் விஷயம் ஒன்றும் தெரியாது. அவள் மகா உத்தமி என்றே நினைத்திருந்தார்கள். நமது ரங்கமணி அவர்களைத் தான் தனித்துக் கண்டு பேசுவதற்கு எப்போது சமயம் வாய்க்கும் என்று அதையே எதிர்பார்த்திருந்தாள். ஒரு தினம் அந்த விதவைப் பெண்ணுடைய தாயார் குளத்திற்கு ஸ்நானம் செய்யச் சென்றதை ரங்கமணி குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்து தானும் ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு குளத்திற்குச் சென்றுள். அங்கு ரங்கமணி அந்த அம்மாள் இறங்கிய துறையிலேயே இறங்கி, பக்கத்தில் இறங்கி துணி துவைத்துக் கொண்டே மெல்ல பேச்சைத் தொடங்கினுள்.

"அதிகமாக வேலை இருக்கிறது விடியற்காலம் என்னை எழுப்பு" என்று பரைசாற்றிச் சிலர் படுப்பது. விடியற்காலம் மணி 4 அடிப்பது முதல் சுப்ரபாதம் பாட வேண்டியது தான். இவர்கள் எழுந்திருப்பதென்பது வழக்கத்தை விட சில நிமிடங்கள் கூடவே ஆய்விடுகின்றன.

ரங்க:—என்ன பெரியம்மா! காசியாத்திரை முடிந்ததா! நீங்கள் நன்முக சுக்ருதம் செய்திருக்கிறீர்கள்; உலக யாத்திரை செய்கிறீர்கள். உங்களை தரிசித்தாலும் பாபம் தீரும்.

அந்த அம்மாள்:—என்னவோ! பூர்வ ஜென்மாந்திரத்தின் புண்ணியம் தான் இது கிடைத்தது. எனக்கு காசியாத்திரை அகப்படப் போகின்றதென்று நான் சொப்பனத்திலும் காணவில்லை. திடீரென்று கிடைத்தது. அதுவும் இலவசமாகக் கிடைத்தது பாருங்கள். ஏதோ கிடைத்தவரையில் லாபம்.

ரங்க:—ஐயோ பாவம்! எல்லா சந்தோஷமும் இருந்தும் உங்கள் பெண்ணுல் உங்களுக்குப் பெரிய வருத்தம் வந்து விட்டது பாருங்கள். அது ஆறுவதா, தீருவதா! குழந்தை பச்சென்றிருந்தால் வயிரும் குளிர்ந்திருக்கும். அந்த விஷயத்தில் கடவுள் உங்களுக்கு மறையாத குறையைச் செய்து; விட்டார். அந்தப் பெண்ணுலேயே உங்களுக்குக் கஷ்டந்தான்.

வந்தவள்:—என்ன செய்வது? நான் செய்த பாவம். அந்தப் பெண் பண்ணிய கர்மம். இரண்டும் விடுமா! அனுபவித்துத்தானே தீரவேண்டும். நான் அந்தக் குழந்தையைப் பெறுவதற்குச் செய்த தபசு சொல்ல முடியாது. அத்தனை தவமிருந்து அதைப் பெற்றேன். அதனுல் நானடைந்த சந்தோஷம் இவ்வளவுதான். அதை எல்லாம் நினைத்து விட்டால் எனக்கு ஜென்மமே வேண்டாம்.

ரங்க:—என் பெரியம்மா! நினைப்பதும் மறப்பதும் உண்டா! சதா மனத்தில் வேலை செய்கிறது. அப்போதே அந்தப் பெண்ணிற்கு மறு விவாகம் செய்திருக்கலாகாதா! அதை ஏன் செய்ய

"காலையும் மாலையும் நான் கோயிலுக்குச் செல்லாமல் புசிப்பதில்லை" என்று சில பக்த நடிகர்கள் கூறுகின்றனர்கள். "கோயிலில் பலமான தளிகை இன்று எதுவுமில்லை; சாதாரண தோசை, சுண்டல் தான்" என்று தெரிந்த உடனே அன்று கோயில் பக்கம், கால் இழுப்பதில்லை. ஏனென்று கேட்டால் 'உடம்பு சரியில்லை' என்கிற பாட்டு வந்து விடுகின்றது. உண்மையில் உடம்பு சரியில்லாமலிருப்பினும் பாமாஷ் சர்க்கரைப்பொங்கல் செய்வதாயின் கோயிலில் ஆசாமியைக் காண்பது நிச்சயம்.

வில்லை; இப்போது இக் காலத்தில் தான் நன்றாக எல்லோரும் செய்கி றார்களே! என்னமோ இத்தகைய விதவைகளுக்கு விவாகம் செய்யா விடின் என்ன செய்வது. நீங்கள் விவாகம் செய்யாமலிருந்தது மிக வும் பிசகு. விவாகம் செய்து கொடுத்திருப்பின் ஒருவனோடு இருந்து குடும்பினியாகி விடுவாள். விவாகம் செய்யாத பிசகினால் பெண் அனியாயமாகப் பாழாகி விட்டது. இதற்கு என்ன செய்யலாம்.

வந்த:—என்ன! என்ன! என் பெண் மீதா நீ மெல்ல பழியான வார்த்தையைக் கூற வந்தாய்; என் குழந்தைக்கு உலகமே இன்ன தென்று தெரியாது. என் குழந்தையைப் பார்த்து நீ எவ்விதம் துணிந்து சொல்ல வந்தாயடி! என் குழந்தை உன்னை என்ன செய்த தடி! உனக்கு இத்தனை வாய்க் கொழுப்பா! விசாரிக்க வந்தவள் போல பேசி வத்திவைபா வைக்கின்றாய்! என் குழந்தையின் மீது அடாப் பழி சுமத்தும் நீ நன்றாக இருப்பாயா! உன் குழந்தைகள் நன்றாக விருக்குமா! என் வயிறு எரிவதுபோல நீ எரிந்து விடுவாய்'' என்று இன்னும் ஏதேதோ மேலே பேசுவதற்குள் ரங்கமணி நல்ல சமயம் வாய்த்ததென்று சந்தோஷ மடைந்து கொண்டே அதை உள்ளடக் கிப் பேசத் தொடங்கி "பெரியம்மா! நான் உங்கள் சாபத்திற்கு ஒரு போதும் ஆளாகமாட்டேன். நான் என் குழந்தை குட்டிகளுடன் கஷ்டப்பட்டு இடும் சாபம்தான் உங்கள் மகளைத் தாக்கும். நான் ஒரு வார்த்தையும் பொய் சொல்லவில்லை. நான் பொய் சொல்ல வேண்டு மென்ற சூஷாத்திரமும் எனக்கில்லை. நான் அவ்வாறு பொய்யுரைத் தால் நான் குழந்தைகளோடு மாண்டுவிடுவேன். உங்கள் குமாரத்தி யின் உத்தமித்தனத்தை நன்கு கண்டறியும் படியான சந்தர்ப்பத்தை கடவுள் எனக்கே காட்டி விட்டார். என் வயிறெரிய, என் குடும்பம் சந்தியில் நிற்க, என் புருஷனையே உன் மகள் வசமாக்கி விட்டதைக் கண்ட பிறகு எனக்கு உங்களிடத்தில் பயம் என்ன. நான் குடும் பத்துடன் படும் கஷ்டம் எனக்கல்லவோ தெரியும். என்னுடைய கணவனே பித்து பிடித்தவர். விதவையாகிய அப்பெண்ணின்

பிடிவாதமாகத் தன் மனத்திற்குள் ஒரு காரியத்தைத் தீர்மானித்து விடுவ தும், பிறகு அதில் ப்ரவேசியாது போலப் பேசுவதும் முடிவில் தான் தீர் மானித்தவாறு நடத்தி விடுவதும் சிலருடைய செய்கையாக விருக்கிறது.

குணமும் துர்க்குணமாகச் சேர்ந்தது. என் குடிக்குக் கொள்ளியாக மாறியது. நான் என் புருஷனையும் உங்கள் பெண்ணையும் எவ்வளவோ விதத்தில் சொல்லிப் பார்த்தாயிற்று. உண்மையில் நீங்கள் வரும் வழியையே நான் எதிர்பார்த்திருந்தேன். உங்கள் பெண் வாந்தி செய்யும் குரல் எங்கள் வீட்டையும் இத்தெருவையுமே இடிக்கின்றது. அந்த வாந்தியே உங்கள் மகள் தான் செய்த காரியத்தின் பலனை அடைந்து விட்டாள் என்று தெரிவிக்கின்றது பாருங்கள். நான் இவ்விதம் சொல்வதால் உங்களுக்கு மனக்கிலேசம் வரும் என்பது எனக்குத் தெரியும். தெரிந்தாலும் என் கஷ்டமும் சகிக்கக் கூடவில்லை, உங்களுக்கும் இதனால் அவமானம் அதிகரிக்கும். ஆகையினால் சொல்லாமலிருத்தல் கூடாதென்று தீர்மானித்தே சொல்லுகிறேன். என் புருஷனுக்கு எத்தனை வழியில் நான் சொல்லக் கூடுமோ அவ்வளவும் சொல்லிப் பார்த்தாயிற்று. இனி நீங்கள் வீட்டை விட்டு விரட்டினால்தான் எனக்கு க்ஷேமம் உண்டு. உங்கள் பெண்ணுக்கு சம்பவித்துள்ள அவமானத்தையும் இப்போதே கூடுமான வரையில் ஒழிக்க வழி செய்யலாம். என்னுடைய குடும்பத்தையே நீங்கள் காப்பாற்றிய பலனுண்டு. என் புருஷன் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு சிறிது கூட நான் கண்ணால் காண்பதில்லை. குடும்பத்திற்காக நான் படும் கஷ்டமும் என் குழந்தைகளுக்குச் சரியானபடி உடை இல்லாது படும் திண்டாட்டமும் கூற முடியாது. நான் எனது பெற்ற தாயாருடன் சொல்வது போல சொல்கிறேன். உங்கள் பெண் விஷயத்தை நான் யாருடனும் சொல்ல வில்லை. அதற்கு நான் வாக்கு தத்தம் செய்கிறேன். என் புருஷனை அங்கு வாராத வழி நீங்கள் செய்து விடுங்கள். தனது சொந்த புத்தி இல்லாத பெண்களோ, ஆண்களோ பிறர் கூறும் வார்த்தையையாவது கேட்க வேண்டும். இரண்டும் அற்றவர்களுக்கு நல்ல வழியில் பிரிவு உண்டாகாது. ஆகையினால் என் புருஷனை உங்கள் மகளிடத்திலிருந்து பிரித்து விடுங்கள்'' என்று

"எந்த விஷயத்தையும் யோசித்துச் செய்யவேண்டும். ஆத்திரப்படாதே" என்று பிறருக்குப் போதிப்பது. தான் ஒரு காரியத்தைச் செய்யும் போது அந்த வார்த்தையை மறந்து தடபுடலாக ஆத்திரப் பட்டுச் செய்துவிடுகிறது. இது என்ன குணமோ!

ரங்கமணி கூறிக் கொண்டு வந்ததெல்லாம் அந்தம்மாள் வயிற்றில் நெருப்பாகப் பற்றி எரிகின்றது. அவளுடைய மனக் கொதிப்பின் எல்லையே தெரியவில்லை. இத்தகைய இழிவான துறையிலா தன் மகள் இறங்கி விட்டாள் என்கிற பெரும் ஆத்திரமும் அவமானமும் ஒருங்கே வந்து அபாரமாகப் புகுந்து கொண்டது. அந்தம்மாள் அதற்கு மேல் ஏதும் சொல்லாமல் அங்கிருந்த நேரே புறக்கடைப் பக்கமாய் தினம் வீட்டிற்குச் செல்லுவதை விட்டு அன்று வீதிப் பக்கமாக வந்தாள். அப்போதுதான் க்ருஷ்ணசாமி வீட்டை விட்டு இறங்கிப் போவதைக் கண்டாள். அன்று பூராவும் பெண்ணுடன் அதிகமாக எதுவுமே பேசாமல் அவளையும் அவள் செய்கையை யுமே கவனித்து வந்தாள். ரங்கமணி சொல்லியது போல வாந்தி எடுப்பதையும் தேகம் வெளுத்து மெலிந்திருப்பதையும் நன்றாக அறிந்துகொண்டாள்.

அந்த ஊரில் ஒரு வில்லி ஜாதிக் கிழவன் இருக்கிறான். அவனுக்கு நன்றாக தாது பார்ப்பதற்குத் தெரியும். அவனை அழைத்துக் கொண்டு வந்து இராக்காலத்தில் தன் பெண்ணை நன்றாகக் கண்டு கொள்ளக் கூடாத விடத்தில் நிற்க வைத்துப் பின் கையைக் காட்டி தாது பார்க்கச் சொன்னாள். வில்லி கிழவனுகையினால் இயற்கையி லேயே கண் நன்றாகத் தெரியாது. அதோடு இருட்டான இடமாயும் இருப்பதால் யாருக்குக் கை ;பார்த்தோம் என்பதே அவனுக்குத் தெரியாது. கை பார்த்த உடனே அவன் சகஜமாக "அம்மா! இந்த தாதுவில் கர்ப்ப நாடி ஓடுகின்றது! பூர்ணமாக மூன்று மாதக் கர்ப்பம் சொல்லலாம். பெரியம்மா! பயமில்லையம்மா! தாது நன்றாக இருக் கின்றது; குழந்தைக்கு அசைவில்லை, நீங்கள் கவலையே பட வேண் டாம். ஆனால் கர்ப்பிணிக்கு உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. இத் தனை உஷ்ணம் ஆவதற்குக் காரணமும் ஏதோ இருக்க வேண்டும். இவ்விதமே இருந்தால் கரு நிற்காது. குளிர்ச்சியாக மருந்து கொடுங்கள்" என்று கூறினான்.

தன்னுடைய வார்த்தைப்படிக்குப் பிறர் கேட்டால் அவர்கள் மிகவும் நல்லவர்கள். சற்று எதிர்த்துப் பேசிவிட்டாலோ, "ஆகா! அவர்களைப் போன்ற பொல்லாதவர்களில்லை என்றசாபம் உடனே பிறந்து விடுகின்றது.

இந்த வார்த்தையைக் கேட்டதும் சொர்ணம்மாளுக்கு இடி விழுந்து விட்டது. தனது செய்கை தன் தாயாருக்குத் தெரியாது என்றே நினைத்திருந்தாள். அன்றுமட்டும் தன் தாய் தன்னைக் கவனித்ததையும், தனக்கு ஒரு காரணமுமின்றி வயித்தியனை அழைத்து வந்து மறுபேச்சின்றி கை காட்ட வேண்டுமென்று கண்டிதத்தின் பேரிலேயே தன் கையை இழுத்து வில்லியிடம் காட்டியதையும் நினைத்தால் அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இதற்குள்ளாக கையில் என்ன நாடி தெரியும். இன்னும் நான்கு மாதங்கள் கூட ஆகவில்லையே?" என்ற ஓர் அசட்டு தைரியத்தினால் தன் தாயாரின் கோபத்திற்குப் பயந்து விளையாட்டாகக் கையைக் காட்டியதும் இந்த வார்த்தையைக் கேட்டு அவள் தன்னுடைய கர்ப்பம் உண்மையாகவே சேதமாகி விடும்போன்ற நிலைமைக்கு வந்து விட்டாள். இன்னது சொல்வதென்று தெரியவில்லை. தன் குட்டு வெளியாகி விட்டதே! என்கிற பெரும் அவமானமும் ஆத்திரமும் பொங்குகின்றது. அதோடு வழக்கம்போல அந்த சமயம் எதிர் வீட்டு க்ருஷ்ணசாமி தங்களுடைய ரகஸிய இடத்தில் காத்திருப்பானே! அவனையும் இவர்கள் நேரில் கண்டுவிட்டால் என்ன செய்வது. "ஐயோ! இவ்விதம் நேருமென்று கனவிலும் காணவில்லையே! என்ன செய்வேன்?" என்று தத்தளிக்கின்றாள். அவளை அப்போது கண்டவர்கள் சவமென்றே கூறலாம். அவ்விதம் அசைவற்று நின்று விட்டாள். அவளுடைய அன்னைக்கு இம்மொழிகளைக் கேட்டதும் உயிரே பாதி போய் விட்டதென்னலாம். பெருத்த அவமானமும் கோபமும் வயிற்றில் எழுந்து கொதிக்கின்றது. எதிர் வீட்டு ரங்கமணி சொல்லியதற்கு அவளைப் பழித்தோமே! இத்தகைய மாறாத ஆபத்து வந்துவிட்டதே? என்ன செய்வேன் கடவுளே! என் கதி இவ்விதமாகவா முடியவேண்டும்!" என்று அபாரமான துக்கத்துடன் அவளும் நின்று விட்டாள்.

மனைவிக்குத் தெரியாது ஒரு காரியமும் செய்வதில்லை என்று பெயர்தான். ஆனால் முக்கியமான விஷயங்களில் மனைவி நினைவே இருப்பதில்லை; மடிந்து விட்டதாகவே நினைவோ என்னவோ!

தபாற் செலவு

இனாம்! இனாம்!!

ஒரு சந்தோஷச் செய்தி

நமது சந்தா நேயர்களில் பலர், நமது புத்தகங்களை வாங்கும் போது, தங்களுக்கு வேண்டிய இதர புத்தகங்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறார்கள். நாம் வேறு புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்வதில்லையாகையால், மற்றவற்றை அனுப்ப முடியாதென்று எழுதவேண்டியிருக்கிறது. அநேக நேயர்கள், தங்களுக்கு வேண்டிய புத்தகங்களை தனித்தனியாக ஒவ்வொரு புத்தகசாலையினின்றும் வரவழைப்பதென்றால் தங்களுக்கு அதிக தபாற் செலவு ஏற்படுகிறதென்று எழுதுவதால், எல்லோருடைய சௌகரியத்தையும் உத்தேசித்து இனிமேல் நமது சந்தா நேயர்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கியனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஆகையால் நேயர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களின் விவரமும், அவற்றின் முழு கிரயமும் முன் பணமாக அனுப்பினால் அவற்றை தபாற் செலவில்லாமல் அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கே தபாற் செலவில்லாமல் அனுப்ப முடியுமாதலால், அதற்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் நான்கணா சேர்த்து அனுப்பவும். இந்த ஏற்பாட்டின்படி வி. பியில் அனுப்ப முடியாது.

மேற்கண்ட ஏற்பாட்டினால் இனிமேல், நமது சந்தாநேயர்களும், அவர்களது நண்பர்களும் தங்களுக்கு வேண்டிய சகல புத்தகங்களை தபாற் செலவும், வீண் அலைச்சலுமின்றி பெற்றுக்கொள்ள முடியுமென்பதைக் கவனிக்கக் கோருகின்றோம்.

மானேஜர்.

சிறந்த தமிழ் நூல்கள்.

தமிழ் நாவல்கள்.

சிவஞானம்	ரூ 1	4
ஞானப்பிரகாசம்	1	8
ஞானசம்பந்தம்	1	4
கமலாக்ஷி	1	12
விஜயசுந்தரம்	2	0
காதம்பரி	1	8
மேகசந்தேசம்	0	14
நமது பங்கஜம்	1	8
பன்னீர் செல்வம்	1	0
சவடால் சம்பந்தம்	1	0
தருமசீலன்	1	0
இரத்னம்பாள்	1	0
பரிமளா	1	0

நீல அரண்மனை	1	4	கனகமணி	2	12
விஜயபாஸ்கரன்	2	0	சந்திரரேகை	2	0
விக்கிரமசிங்கன் கோட்டை	1	0	பத்மாக்ஷி	2	0
ஷண்முகசுந்தரம்	2	0	கனகாங்கி	2	0
இருபடுகொலை	0	12	சுந்தரி மனோஹரன்	1	8
விஷத்தாம்பூலம்	0	12	மாயாசுந்தரி	0	12
பத்மாமணி	1	0	அமிர்தவல்லி	1	0
ரஸாயனக்கள்வன்	0	12	வைதேகி	2	8
அம்புஜாக்ஷி	2	0	பத்மசுந்தரன்	2	8
ஜகதீசன்	1	12	ராதாமணி	2	8
மஞ்சுளா	0	10	சாருலோசனை	2	8
காளிங்கராயன்கோட்டை	4	0	சண்பகவிஜயம்	1	12
விலாசவதி	3	0	கௌரிமுகுந்தன்	1	12
பவளத்தீவு	1	8	கோபாலரத்னம்	0	14
கல்யாணி	0	12	சுகந்தபுஷ்பம்	1	0
ஸ்ரீலோலன்	1	4	நவநீத கிருஷ்ணன்	2	0
அனந்தசாகரன்	0	8	ருக்மணிகாந்தன்	2	0
நாகரிகப்போர்	1	8	சாமளநாதன்	2	0
கயற்கண்ணி	0	12	வீரவஸந்தா	0	8
ஆனந்தமடம்	1	0	மாதவமணி	0	3
அனுமான்சிங்	0	12	கனகபுரி	1	8
அசலாம்பிகை	2	0	மங்கையர்க்கரசிகாதல்	1	12
கிருஷ்ணவேணி	2	0	இரத்னபுரி ரகஸ்யம்	4	0
சிந்தாமணி	2	0	தபால்கொள்ளை	0	14
கற்பகசுந்தரி	2	12	ஞானசெல்வாம்பாள்	9	10
எங்கள் ஊர்	1	0	மின்சாரமாயவன்	1	8
இராதை	1	4	கனகபூஷணம்	3	8
சுவர்ணசுந்தரம்	2	0	இந்திராபாய்	2	8
திக்கற்ற இரு குழந்தைகள்	1	8	மஞ்சளறை மர்மம்	1	8
தலையணை மந்திரம்	1	0	விளையாட்டு சாமான்	1	6
தீனதயாளு	0	12	மதனாம்பாள்	3	0
வசந்தோத்யானம்	3	0	பத்மாஸனி	0	14
விஜயமார்த்தாண்டம்	1	4	பவளத்தீவு	3	0
குற்றமும் சிக்ஷையும்	1	12	கற்கோட்டை	2	0
முத்து மீனாக்ஷி	0	8	அமராவதி	4	0
உதயலன்	0	12	கமலசேகரன்	1	12
கனகமாலை	1	4	தினகரசுந்தரி	1	0
நவரத்னலாகெட்	0	12	தேவசுந்தரி	1	4
மணிவாசகன்	1	4	ஆனந்தசிங்	2	0
சந்திரசேகரன்	1	0	மாதவீமாதவன்	2	0
காந்திமதி	2	0	பூங்கோதை	0	10
ஷண்முகநாதன்	1	4	வீரநாதன்	0	12
அமிர்தம்	0	8	சுவர்ணாம்பாள்	0	12
கனகாம்பாள்	1	0	கோமளவல்லி	0	8
வீரபத்தினி	1	0	மதனபூஷணம்	1	0
ஸவர்ணம்புஜம்	0	8	கடற்கொள்ளை	3	4
கனகாம்புஜம்	2	12	நவனீதாம்பை	1	0

இராஜாமணி	2	0
அற்புத மர்மங்கள்	1	12
கற்பகச்சோலை	1	4
மலையாளபகவதி	1	0
மனமோகனமாணிக்கம்	1	8
இரத்னாபாய்	1	12
பன்னிரு மரகதம்	3	0
விசித்திரத்துப்பறியுங்கண்	3	0
ஆனந்தகதாகல்பகம் 4 வது	3	0
காந்தி உண்மைசீடன்	1	0
ஜயவீரன்	1	12
அங்கயற்கண்ணி	1	12
அம்பலத்தரசன்	1	8
அம்பலவாணன்	1	4
மாணிக்கவல்லி	1	0
அமிர்தகுமாரி	1	4
திருக்கழுக்குன்றக் கொலை	1	8
சாரதை தந்திரம்	0	12
இராமனாதன்	2	12
சுந்தர தீரன்	1	8
ஜடாவல்லவர்	2	8
மதனன் நீதிமதி	1	0
வீரபாகு	1	8
தளுக்குசுந்தரி	1	0
இராஜீவி	1	0
ரெயில் திருடன்	0	10
சாந்திபுரக் கொலை	1	0
மங்களசுந்தரம்	0	12
ஸுவர்ச்சலா	0	8
கள்ளக்காதலன்	2	0
பச்சைமோதிரம்	1	0
பவளப்பதுமை	1	4
மேகரஞ்சனி	1	0
மேனகா	3	0
கும்பகோணம் வக்கீல்	3	0
சௌந்தர கோகிலம்	6	0
மாயாவினோதப் பரதேசி	5	0
மதனகல்யாணி	4	8
பூர்ணசந்திரோதயம்	7	8
திகம்பரசாமியார் பால்யலீலை	5	0
பாலாமணி	2	8
வஸந்தமல்லிகா	1	8
வித்யாசாகரம்	1	4
லொடபடசிங்	0	12
கமலாம்பாள்	1	8
கப்பற்கொள்ளை	1	4
இராஜராஜேஸ்வரி	1	8
சரோஜினி	2	0
கருங்குயில்குன்றக்கொலை	4	2
வித்யானந்தர்	1	8
ஆனந்தமனோகரன்	1	0
பொற்றொடி	1	2
விசித்திர தேவலோக கோர்ட்	0	8
குடும்பவினோதக்கதைகள்	2	0
பிரபஞ்சவினோதக்கதைகள்	1	0

சிறந்த தமிழ் நாடகங்கள்.

இந்திரமோகனா	0	8
இராமானுஜர்	0	8
திலோத்தமா	0	12
திருஞான சம்மந்தர்	0	12
தொண்டரடிப்பொடி	0	5
சங்கராச்சாரியர்	0	5
இராமாமிர்தம்	0	4
சத்யதேவி	1	0
ரோஜாதேவி	1	8
மாணிக்கவாசகர்	0	8
வஸந்த கோகிலம்	1	4

ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் நாடகங்களும் கிடைக்கும்.

இராஜீய தேசிய நூல்கள்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் 2 பாகம்	4	0
சிவாஜீ	1	0
காந்தி விசாரணை	0	4
திலகர்	0	8
சத்திய சோதனை	2	8
மகாத்மா காந்தி	1	8
சமரஸமுயற்சி	0	8
காந்தி சிறை அனுபவம்	0	8
இந்திய ஸ்வராஜ்யம்	0	8
ஐஸ்வரிய சக்கரம்	0	8
ஒற்றுமையாமை ஏன்	0	8
ஒற்றுமையாமை விவரம்	0	4
இந்தியாவும் சுயாட்சியும்	1	8
காந்தி ஆத்மசக்தி	0	10
அசோகசக்கரவர்த்தி	0	8
கும்பமகாராணா	0	6
இராஜராஜசோழன்	0	10
புத்தர் ஜாதகக் கதைகள்	0	10
நெப்போலியன்	1	8
பாரதநாட்டின் நிலைமை	1	0
இந்தியா இழக்வதனம்	1	0
இராஜரீக சாஸ்திரம்	1	0

மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
துரதிர்ஷ்ட இந்தியா	2	0
இந்தியபிதா	2	0
மாயாமேயோ	2	0
இந்தியமாதா	1	8
முகம்மதலி ஷவுக்கதலி	1	0
ஆரோக்யவழி	0	12
சர்க்கா	0	8

வியாபார நூல்கள்.

வர்த்தகக் கணித நூல்	2	0
வியாபாரதந்திரம்	1	8
கைத்தொழில் முறை	1	8
வர்த்தக யுக்தி	0	12
புதிய ஊக்கம்	0	2
திரவியம் திரட்டும் வழி	0	6

வைத்திய நூல்கள்,

ஆரோக்ய சாஸ்திரம்	2	0
மருத்துவ சாஸ்திரம்	2	8
அகஸ்தியர் நயனவிதி	1	4
டிபின் என்பது	0	12
வைத்தியத் திரட்டு	0	12
நசகாண்டம்	0	8
சத்வைத்யஜீவனம்	0	8
மதுமேகம்	0	8
க்ஷயரோகம்	0	8
அகஸ்தியர் ரணவைத்தியம்	0	12

வேதாந்த நூல்கள்.

பகவத்கீதை வசனம்	3	0
மதஸ்தாபகர்களின் சரித்திரக்கொத்து	2	8
ஆழ்வார்கள் சரித்திரம்	1	8
சாதனசதுட்டயம்	3	8
ஞானக்களஞ்சியம்	3	0
வேதாந்த பாஸ்கரன்	3	0
ஞானயோக ரகஸ்யம்	3	0
அத்யாத்மயோகம்	2	8
ஞானயோகம்	2	4
இராஜயோகம்	2	4
வேதாந்தரகஸ்யம்	2	0
கர்மயோகம்	1	0
பக்தியோகம்	0	12
ஆங்கில ஆசான்	2	0
ஆனந்த ஆங்கில பாஷாபோதினி	2	0

சங்கீத நூல்கள்.

ஸ்ரீ தியாகராஜ ஹ்ருதயம் 3 பாகங்கள்	10	0
ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்	3	0
ஸங்கீத ரத்னாவளி	3	0
ஸங்கீதரஸார்ணவம்	2	8
ஸங்கீத சித்ராம்பரி	1	8
ஸங்கீத ஸர்வார்த்த சிந்தாமணி	2	8
பாண்டுரங்கபக்தவிஜயம் 5 பாகங்கள்	6	0
ஜாதக ரகசியம்	5	0

இதர பிரசுரங்கள்.

கௌஹர்ஜான் காதல் 1 & 2 பாகம் பாகம் 1-க்கு	1	8
பண்டிதை மெஸ்மெரிஸா 3-ம் பதிப்பு	1	8
மலை விழுங்கி மகாதேவன்	0	6
லோகாதிசய விளக்கம்	1	4
சுவாசமே உயிர்	1	8
ஜ்யாரத்துல் குபூர்	0	12

இல்வாழ்க்கை சம்பந்தமான புஸ்தகங்கள்

மணவாழ்க்கையின் மர்மங்கள்	2	4
மானிட இரகசிய சாஸ்திரம்	1	0
கருப்ப சாஸ்திரம்	1	8
சரீர மர்ம சாஸ்திரம்	1	0
கொக்கோகம் மூலம்-உரை	1	4
காதல் வாழ்க்கையின் மர்மங்கள்	2	0
சிற்றின்ப வெற்றி	2	4
ஜீவவசிய பரம ரகஸியம்	3	0
இல்வாழ்க்கையின் இரகஸியங்கள்	2	0
இன்பவாழ்க்கையின் ரகஸி	2	0
யங்கள்	2	0
மனோவசிய சாஸ்திரம்	1	8
மதனகாம லீலை	2	0
சிற்றின்ப ஞானசிந்தாமணி	1	4
ஸ்திரிபுருஷ ரகசியம்	1	4
மதன ரதி ரஹஸ்யம்	2	0
விறலி விடு தூது	0	12
முத்தத்தின் மர்மம்	1	8
மங்கையின் முத்தம்	2	0

மேற்கண்ட புத்தகங்களைத் தவிர மற்ற புத்தகங்களையும் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம்.

இனாம் ஒரு வருஷ சஞ்சிகையும் இனாம்

பல பரிசுகளும்

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தது முதல் இதற்குள் நமது சந்தாதார்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை புண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதார்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப்பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண	மனுப்புகிறவர்களுக்கு	மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதார்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி அல்லது பத்மசுந்தரன் அல்லது ராதாமணி அல்லது சாருலோசனை

அரிய சந்தர்ப்பம் ஒரு மாதம் வரையில்

புது வருஷக் கொண்டாட்டம்

நமது புதிய சந்தா நேயர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, நமது சொந்த நாவல்களை மூன்று கட்டுகளாகப் பிரித்து ஐந்து ரூபாய் முன் பண மனுப்புகிறவர்கட்கு அவர்கள் கேட்கும் ஒரு கட்டு தபாற் செலவின்றி அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். ரூ. 15. மொத்தமாக அனுப்புகிறவர்களுக்கு கீழ்க் கண்ட மூன்று கட்டுகளி லுள்ள புத்தகங்களுடன் "சுகந்தபுஷ்பம்" "கோபாலரத்னம்" "மாதவமணி" என்ற 3 நாவல்களும் இனாமாக அனுப்பப்படும்.

1.	2.	3.
வைதேகி	பத்மசுந்தரன்	நவநீத கிருஷ்ணன்
சாருலோசனை	ராதாமணி	ருக்மிணீ காந்தன்
சண்பகவிஜயம்	கௌரீ முகுந்தன்	சாமளநாதன்
		வீர வஸந்தா

'ஜகன்மோகினி' ஆபீஸ்
26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி
சென்னை.

ஸ்வதேசியக் கீர்த்தனைகள்.

தற்போது நம் நாட்டிலுள்ள தேசிய உணர்ச்சியினால், மேற்படி புத்தகத்தின் முதற் பதிப்புக் காபிகள் வெகு விரைவாகச் செலவழிந்து வருகின்றன. நமது கைவசம் சொற்ப காபிகளே இருப்பதால், வேண்டியவர்கள் உடனே இரண்டரை அணா ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26. தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

ஆச்சர்யமான மாந்திரீகம் &
மாருதி உபாசி ஜோதிடம்

சிறந்த ஜோஸ்யர்

தங்கள் ஜாதகக் குறிப்பு அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

தரும நியாயமான கேள்விகள் 5-க்கு ரூ 1—0—0. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 0—4—0. ஒரு வருட பலன் தசா புக்தி அந்தர வாரியாக எழுதி யனுப்ப ரூ 5—0—0. ஒரு தசா பலன் எழுத ரூபா 5—0—0. துவாதச பர்வ பலன் எழுத 5—0—0. ஜாதகம் கணித்து லக்னம் புடம் செய்து ராசி அம்சம் பலன் குறித்தனுப்ப ரூ 2—0—0 மாருதி கவசம் ரக்ஷை ரூ 3—8—0 ஆயுள் வரை பலன் எழுத ரூ 25—0—0 எல்லா விவரங்கட்கும் விலாசம்.

A. கோவிந்த ராஜய்யர்,
Astrologer & Proprietor
மாருதி ஜோஸ்ய நிலயம்.
VALAVANUR. S. Arcot.

பரிசுகளின் விவரம்.

5-வது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா ந.

B. 18. Mr. K. Balasundram. Durban.
V. 145. ,, A. Venkata Battachariar, Mambalam.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மானேஜர்

இந்தியாவில் பெரியதும்,
ஏனைய கம்பெனிகளை விட, மூலதனம் மிகுதியா
யுள்ளதுமான ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனியாகிய

"நியூ இந்தியா"

வில் இன்ஷியூர் செய்யுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ், கட்டடங்கள், சரக்கு
களுக்கு தீ விபத்தினால் நேரும் இன்ஷ்யூரன்ஸ்,
ஏற்றுமதி இறக்குமதியில் சரக்குகளுக்கு
இன்ஷ்யூரன்ஸ்

மோட்டார் கார் முதலிய இன்ஷ்யூரன்ஸ்களை
இக்கம்பெனியார் குறைந்த விகிதத்தில்
செய்கிறார்கள்

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வேலை ஆரம்பித்த இரண்டு
வருஷங்களுக்குள்ளாக**

**ஒரு கோடியே 55 லக்ஷத்துக்கு புரொபோசல்கள் பெற்று
1 கோடியே 10 லட்சம் பெறுமான லைப் பாலிஸிகளைப்
பூர்த்திசெய்து இந்தியாவில், ஏற்கனவே யுள்ள
எல்லா லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி
களையும் நியூ இந்தியா தோற்கடித்து விட்டது.**

**எமது வரவு செலவு திட்டத்துக் கெழுதித் தருவித்து எங்க
ளிடம் இன்ஷியூர் செய்வதால் உங்களுக்கு ஏற்படும் ஏராள
மான பாதுகாப்பை நீங்களே காணுங்கள்.**

4/5, முதல் லைன் பீச்,
மதராஸ்.

கே. கே. ஸ்ரீனிவாஸன்,
பிராஞ்சு மானேஜர்.

210033

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம்!!;

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¼ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¼ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¼ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நேசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

"ஜகன்மோகினி" யில்

வெளிவந்த நாவல்கள்.

மலர் 1.	ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய				
	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
மலர் VII.	சாருலோசனை (2-பாகங்கள்)	ரூ.	2	0	0
	ருக்மிணீ காந்தன்	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
சாருலோசனை	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
ருக்மிணீ காந்தன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீ முகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனாம் தபாற்செலவு இனாம்

ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்" "ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

வத்ஸலா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.